பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 வைகாசி 03 திங்கட்கிழமை 17.05.2021 கதிர் 193

**இனி து ரகசியம் அல்ல!**

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலம் தொடர்பாக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை சபாநாயகர் நாளை நாடாளுமன்றத்தில் அறிவிப்பார். அதன் பின்னர் அடுத்த நாளும், அதற்கு அடுத்த நாளும் இந்தச் சட்ட பக்கம்02

## நாள்தோறும் 2 ஆயிரத்தை தாண்டும் தொற்றாளர்கள்

### நேற்றும் 2,275 பேருக்குக் கொரோனா உறுதி

நாட்டில் நேற்று மாத்திரம் 2 ஆயிரத்து 275 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 746 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, 2

## வடக்கில் 55 பேருக்கு நேற்று கொரோனா

### 20 பேர் ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 55 பேருக்குகே கொரோனா தொற்றுள்ளமை நேற்று கண்டறியப்பட்டுள்ளது என மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்ப்பாணம் 2

# நினைவேந்தல் தடையை உடன் இரத்துச் செய்யவும்

## முல்லைத்தீவு நீதிமன்றில் இன்று நகர்த்தல் பத்திரம்



(ந.லோகதயாளன்)

இறுதிப் போரில் சாகடிக்கப்பட்ட தமிழ் உறவுகளை நினைவுகூரும் 'முள்ளிவாய்க்கால் படுகொலை'யின் 12ஆம் ஆண்டு நினைவேந்தல் தரணியெங்கும் நாளை அனுஷ்டிக்கப்படவுள்ளது. இந்தநிலையில், முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் நினைவேந்தல் நிகழ்வுக்கு முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவை உடன் இரத்துச் செய்யுமாறு கோரி அதே நீதிமன்றத்தில் இன்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது என அறியமுடிகின்றது. 2

### இந்நாள், முன்னாள் எம்.பிக்கள் உட்பட

## மட்டக்களப்பு மாவட்டத்திலும் 22 பேருக்குத் தடை உத்தரவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இலவு நடத்துவதற்கு இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட 22 பேருக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு, வாழைச்சேனை மற்றும் ஏறாவூர் ஆகிய மூன்று நீதிவான் நீதிமன்றங்களும் அந்தந்தப் பகுதிகளின் பொலிஸ் நிலையங்களின் விண்ணப்பங்களுக்கமைய தடை உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளன.

தமிழ்த் தேசியக் 2

## இன்று முதல் அமுலுக்கு வரும் தே.அ.அ. இலக்க நடைமுறை

### பொலிஸ் பேச்சாளர் அறிவிப்பு

வீட்டிலிருந்து வெளியே செல்ல தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்க நடைமுறை இன்று முதல் அமுலுக்கு வருகின்றது எனப் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று தொடக்கம் எதிர்வரும் 31ஆம் திகதி வரை இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை இரவு நேரப் பயணக் கட்டுப்பாடு அமுலில் இருக்கும். 2

## மேலும் 21 பேர் பலி; மொத்தச் சாவு 962

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மேலும் 21 பேர் உயிரிழந்துள்ளனர் என்று அரசதகவல் திணைக்களம் நேற்றிரவு அறிவித்துள்ளது.

16 ஆண்களும், 5 பெண்களும் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். 2

## இன்று அதிகாலை தளர்கிறது முழு நேரப் பயணக் கட்டுப்பாடு

(ந.லோகதயாளன்)

இலங்கையில் கடந்த வியாழக்கிழமை இரவு 11 மணி முதல் அமுலுக்கு வந்திருந்த மூன்று நாள் முழு நேரப் பயணக் கட்டுப்பாடு இன்று அதிகாலை 4 மணி முதல் தளர்த்தப்படும்.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான ஜனாதிபதி செயலணியின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அத்துடன் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியில் மக்கள் வழங்கிய ஒத்துழைப்புக்கு அவர் நன்றியையும் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையைக் 2

## ரிஷாத் எம்.பி. நாடாளுமன்றம் வர அனுமதி

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் மரண தண்டனைக் கைதி பிரேமலால் ஜயசேகர ஆகியோர் விரும்பினால் நாடாளுமன்ற 2



# சுகாதார ஆலோசனையைப் பின்பற்றினால் 3 வாரங்களுக்குள் கொரோனாவுக்கு முடிவு

## இராணுவத் தளபதி அதீத நம்பிக்கை



இலங்கையில் எதிர்வரும் 2 – 3 வாரங்களுக்கு மக்கள் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றிச் செயற்பட்டால் கொரோனா வைரஸ் தொற்றின் மூன்றாவது அலையைக் கட்டுப்படுத்த முடியும் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றிய குறைவான அறிகுறிகளை வெளிக்காட்டுக்காட்டும் நோயாளிகளுக்கு வீடுகளில் வைத்த சிகிச்சை அளிப்பது தொடர்பான வழிகாட்டல்களை எதிர்வரும் சில தினங்களில் சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வெளியிடப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

---

### இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மூலம் மீதான விவாதத்தை நடத்தி அதனை சட்டமாக நிறைவேற்றுவதில் அரசுத் தரப்பு முனைப்பாக இருக்கின்றது.

இந்த விவகாரத்தில் சர்ச்சைக்குரிய பல அம்சங்கள் இருக்கின்றமையால் – அவற்றில் பல அரசமைப்பின் சில ஷரத்துக்களை மீறுவனவாக உள்ளன என்று கருதி – குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன்தான் அந்தச் சட்டப்பிரிவில் சிலவற்றை சட்டமாக்க முடியும் என உயர்நீதிமன்றம் உத்தரவிடும் எனப் பல தரப்புகளும் எதிர்பார்க்கின்றன.

அப்படித் தீர்ப்பு அமைந்தாலும், அந்தச் சவாலை எதிர்கொள்ள ஆளும் தரப்பு எப்போதோ தயார் எனக் கூறப்படுகின்றது.

விசேடமாக முஸ்லிம் எம்.பிக்கள் – வழமையான தமது பரவணிப் பழக்கப்படி – மீண்டும் ஒரு தடவை 'பல்டி' அடிக்கத் தயாராகி விட்டனர் என்று உள்வீட்டுத் தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் தலைவர் ஹக்கீமின் கட்டுப்பாட்டில் இல்லைப் போலும். அவர் பாவம் என்கின்றனர் அவருக்கு நெருக்கமான சிலர். பழுத்த அரசியல்வாதியான அவர் கொஞ்சமாவது அரசியல் நேர்மைத்தனத்துடன் இனி யாவது செயற்பட வேண்டும் என விரும்புகின்றார். ஆனால் அவரது சமூகம் – முஸ்லிம் தரப்பு – தாங்கள் வர்த்தக சமூகத்தவர்களே, ஆகவே அரசியலையும் வர்த்தகமாகச் செய்வோம் என்று ஒற்றைக் காலில் நின்றால் அவர் என் செய்யமுடியும்? கொழும்புத் துறைமுக நகர சட்ட மூலத்தை நிறைவேற்ற மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு தேவை என்றால், அவரது கட்சியின் – அணியின் – எம்.பிக்கள் எல்லோரும் மொட்டுக் கட்சியின் பின்னால் நிற்பார்கள், பாவம், இவர் மட்டும்தான் சஜித் பக்கம் தொங்கிக் கொண்டிருக்க வேண்டும், அதுதான் நிலைமை என்கின்றன அந்த வட்டாரங்கள்.

அதனால் ஹக்கீம் மிகவும் மனம் நொந்து போய் இருக்கின்றார் என்றும் கேள்வி.

ரிஷாத் பதியுதீனின் நிலைமையும் அதுதான். இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவாக – கட்சியின் முடிவை மீறி – வாக்களித்த தனது கட்சி எம்.பிக்கு எதிராக உரிய முறையில் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்க அவர் தயாராக இருந்தாராம்.

அப்படி ஒழுங்கு நடவடிக்கைக் கடிதத்தை அவர் தனது எம்.பிக்குக் கையளித்தால், அந்த எம்.பியைப் போல இருபதாவது திருத்தத்துக்கு கட்சி முடிவை மாறி வாக்களித்த ஏனைய முஸ்லிம் எம்.பிக்கள் எல்லோரும் பயந்து விடுவர், தங்கள் எல்லோர் மீதும் இனி ஒழுங்கு நடவடிக்கை பாயும், தாங்களும் சட்டச் சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டி நேரும் என்றெல்லாம் அவர்கள் அஞ்சுவர். அதனால் இப்போது கொழும்புத் துறைமுக நகர சட்ட மூலத்துக்கு ஆதரவாக – கட்சி முடிவை மாறி – அவர்கள் வாக்களிக்காமல் பின்னடித்து விடுவர் என்றெல்லாம் அதிகாரத் தரப்புக்குச் சுட்டிக்காட்டப்பட்டதாம்.

தகவல் முற்கூட்டியே கசிந்தமையால், அப்படிக் கடிதம் எதையும் தனது எம்.பிக்கு கையளிப்பதற்கு முன்னரே இரவோடு இரவாக ரிஷாத்தை அள்ளி வந்து, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுப்புக் காவலில் வைத்ததும், கடந்த நாடாளுமன்ற அமர்வுக்கு அவரை நாடாளுமன்றுக்குக் கூட்டி வராமல் தவிர்த்ததும் இந்தப் பின்புலத்தில்தான் நடந்தேறினவாம்.

மே முதல்வார அமர்வின்போது நாடாளுமன்றுக்கு ரிஷாத்தை அழைத்து வந்திருந்தால், நாடாளுமன்றத்தில் வைத்து, மேற்படி ஒழுங்காற்று நடவடிக்கை தொடர்பான ஆவணங்களில் அவர் கையயாப்பமிட்டு தனது எம்.பிக்கு அவற்றைக் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருப்பார் என்று கருதியே அப்படி அதிகாரத் தரப்பு நடந்து கொண்டு அவரை நாடாளுமன்றுக்குக் கூட்டி வராமல் தடுத்தது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாளை ரிஷாத் நாடாளுமன்றுக்குக் கூட்டிவரப்பட்டாலும் தனது எம்.பிக்கள் கொழும்புத் துறைமுக நகர சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களிக்கின்றமையைத் தடுக்கும் நடவடிக்கைகளை எடுப்பதற்கு அவருக்குப் போதிய கால அவகாசமோ, அதற்கான உத்தியை வகுத்து காய் நகர்த்துவற்கு வாய்ப்போ இருக்காது என்றும் கூறப்படுகின்றது.

பச்சோந்திகளை வைத்து அரசியல் பிழைப்பு நடத்தினால் அதன் தலைவர்களின் நிலைமை இப்படித்தானாகும். அது தவிர்க்க முடியாதது....!

– மின்னல் –

---

### மேலும் 21 பேர் பலி;...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 962 ஆக உயர்வடைந்துள்ளது.

இமதுவ பகுதியைச் சேர்ந்த 65 வயது ஆண், முருங்காமுல்ல பகுதியைச் சேர்ந்த 72 வயது ஆண், அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 65 வயது ஆண், மொறட்டுவ பகுதியைச் சேர்ந்த 68 வயது ஆண், மீரிகம பகுதியைச் சேர்ந்த 70 வயது ஆண், இங்கிரிய பகுதியைச் சேர்ந்த 69 வயது பெண், புலத்சிங்ஹல பகுதியைச் சேர்ந்த 82 வயது ஆண், நேபட பகுதியைச் சேர்ந்த 60 வயதான ஆண், பதுளை பகுதியைச் சேர்ந்த 37 வயது ஆண், கெலிஓய பகுதியைச் சேர்ந்த 60 வயது ஆண், யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த 60 வயது பெண், ஹந்தப்பஹான்கொட பகுதியைச் சேர்ந்த 67 வயது ஆண், ஹபராதுவ பகுதியைச் சேர்ந்த 77 வயது பெண், எம்பிலிபிட்டி பகுதியைச் சேர்ந்த 83 வயது ஆண், நாக்கியாதெனிய பகுதியைச் சேர்ந்த 52 வயது பெண், காலி பகுதியைச் சேர்ந்த 69 வயது ஆண், கடவத்தை பகுதியைச் சேர்ந்த 56 வயது ஆண், ஹலிஎல பகுதியைச் சேர்ந்த 53 வயது ஆண், மாய்யாவ பகுதியைச் சேர்ந்த 57 வயது ஆண், களுத்துறை தெற்கு பகுதியைச் சேர்ந்த 75 வயது பெண், காலி பகுதியைச் சேர்ந்த 81 வயது ஆண் ஆகியோரே கொரோனா மரணப் பட்டியலில் நேற்றுப் பதிவாகியுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

---

### இன்று அதிகாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்டுப்படுத்துவதற்காக நீண்ட வார இறுதி விடுமுறை என்பதால் கடந்த 13ஆம் திகதி இரவு 11 மணி முதல் 17ஆம் திகதி அதிகாலை 4 மணி வரையிலும் மூன்று நாள்களுக்கு முழு நேரப் பயணக் கட்டுப்பாட்டை விதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

இதன்படி முன்னர் அறிவித்தவாறு இன்று அதிகாலை முதல் அந்த கட்டுப்பாடு நீக்கப்படும்.

எவ்வாறாயினும் முழுநேரப் பயணக் கட்டுப்பாட்டை நீக்கினாலும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகள், இரவு நேரப் பயணக் கட்டுப்பாடுகள் (இரவு 11 மணி முதல் அதிகாலை 4 மணி வரை) மே 31ஆம் திகதி வரையில் அமுலில் இருக்கும் – என்றார்.

---

### ரிஷாத் எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அமர்வில் கலந்துகொள்ள சபாநாயகர் அனுமதி அளித்துள்ளார்.

இது தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் சிறைச்சாலை ஆணையாளர் நாயகத்துக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது என நாடாளுமன்ற படைக்கல சேவிதர் தெரிவித்துள்ளார்.

---

### மட்டக்களப்பு மாவட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தம் கருணாகரம், இரா.சாணக்கியன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், சீ. யோகேஸ்வரன், ஞா.ஸ்ரீநேசன், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இந்திரகுமார் பிரசன்னா, மட்டக்களப்பு மாநகர மேயர் தி.சரவணபவன் உட்பட 22 பேருக்கான தடை உத்தரவுக் கடிதங்களை நேற்று அவர்களுடைய வீடுகளுக்குச் சென்று பொலிஸார் கையளித்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 11 வருடங்களாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு பல இக்கட்டான காலத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் உணர்வுபூர்வமாக நினைவுகூரப்பட்டு வந்தது. இந்தநிலையில் இவ்வருடம் நீதிமன்றத் தடை உத்தரவு மூலம் பொது இடங்களில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனினும், மக்கள் அனைவரும் நாளை – மே 18ஆம் திகதி தங்கள் வீடுகளில் கட்டாயம் விளக்கேற்றி நினைவேந்தலைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

---

### வடக்கில் 55 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 642 பேரின் மாதிரிகள் நேற்று பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

அதில் , யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 9 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 20 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 8 பேரும், வவுனியா மாவட்டத்தில் 11 பேரும், மன்னார் மாவட்டத்தில் 7 பேரும் என 55 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு வைத்தியசாலையில் 8 பேரும், புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேரும் என 20 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்கள் அனைவரும் புதுக்குடியிருப்பு ஆடைத்தொழிற்சாலையைச் சேர்ந்தவர்கள்.

கிளிநொச்சி வைத்தியசாலையில் 5 பேருக்கும் , பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும் , வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த ஒருவருக்கும், வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்கும், பூவரசங்குளம் வைத்தியசாலையில் 6 பேருக்கும், மன்னார் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட 7 பேருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன், யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வவுனியா வளாக மாணவர்கள் 6 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 3 பேருக்கும், பருத்தித்துறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட இருவருக்கும், சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும், ஊர்காவற்றுறை, சாவகச்சேரி மற்றும் சங்கானை பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் தலா ஒருவருக்கும் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது – என்றார்.

---

### நாள்தோறும் 2 ஆயிர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொரோனாத் தொற்றிலிருந்து ஒரு இலட்சத்து 18 ஆயிரத்து 322 பேர் குணமடைந்துள்ளனர் எனவும், 23 ஆயிரத்து 483 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அரச தகவல் திணைக்களம் நேற்றிரவு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### நினைவேந்தல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முள்ளிவாய்க்கால் மண்ணில் நினைவேந்தலில் கலந்துகொள்வதைத் தடுக்கும் வகையில் 32 பேருக்குத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன், அவர்களுக்கு வழங்கப்பட்ட தடையுத்தரவில் அவர்களுடன் இணைந்து செயற்படுகின்றவர்களுக்கும் தடையுத்தரவு வழங்கப்படுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இன்றும் 20 இற்கும் மேற்பட்டவர்களுக்குத் தடையுத்தரவு வழங்கப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

இந்தத் தடையுத்தரவுகளை உடன் இரத்துச் செய்யுமாறும், நினைவேந்தல் செய்வதற்கு அனுமதிக்குமாறும் கோரியே முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.

யாழ்ப்பாணத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்குத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு தெரிவித்து யாழ். பொலிஸாரால் நேற்றுமுன்தினம் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை யாழ். நீதிவான் நீதிமன்றம் தள்ளுபடி செய்தமையைச் சுட்டிக் காட்டி முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது எனவும் தெரியவருகின்றது.

---

### இன்று முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த நேரங்களைத் தவிர்த்து ஏனைய நேரங்களில் (அதிகாலை 4 மணி முதல் இரவு 11 மணி வரை) தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையிலேயே பொதுமக்கள் வீட்டிலிருந்து வெளியேற முடியும்.

அத்தியாவசிய சேவையை முன்னெடுப்பவர்கள், தொழிலுக்குச் செல்லும் அரச மற்றும் தனியார் துறையினருக்கு குறித்த காலப்பகுதியில் இந்த நடைமுறை பொருந்தாது. பொருள்கள் கொள்வனவு உட்பட இதர விடயங்களுக்காக வீட்டிலிருந்து வெளியே வருபவர்களுக்கே இந்த நடைமுறை பொருந்தும்.

தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கம் ஒன்றை எண்ணாக இருந்தால் (1,3,5,7,9) ஒன்றை இலக்க நாளில் வெளியே செல்லாம். உதாரணமாக இன்று (17) செல்லாம். இரட்டை இலக்க நாளாக இருந்தால் (2,4,6,8) இரட்டை இலக்க நாளிலே வெளியே செல்லாம். உதாரணமாக நாளை (18) வெளியில் செல்ல முடியும். பூஜ்ஜியம் (0) இலக்கமும் இரட்டை எண்ணாகவே கருதப்படும்.

இதேவேளை, எதிர்வரும் 31ஆம் திகதி வரை மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடையும் அமுலில் இருக்கும் – என்றார்.

# பொலிஸ் பாதுகாப்பில் இரு சந்தேகநபர்கள் சுட்டுக்கொல்லப்பட்டமை விசனத்துக்குரியது

## நடவடிக்கைக்குக் கோருகிறது சர்வதேச மன்னிப்புச்சபை

கொழும்பு, மே 17

இலங்கையில் பொலிஸ் பாதுகாப்பில் இருந்த இருவர் அடுத்தடுத்த நாள்களில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் பலியான சம்பவம் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகச் சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளதுடன் இந்தச் சம்பவத்திற்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்களை சட்டத்தின் முன்நிறுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

பொலிஸ் பாதுகாப்பிலிருந்த பாதாள உலகக்குழுவைச்சேர்ந்த 'உரு ஜுவா' என்றழைக்கப்படும் மெலோன் மாபுல மற்றும் 'கொஸ்கொட தாரக' என்றழைக்கப்படும் தாரக பெரேரா விஜேசேகர ஆகியோர் அடுத்தடுத்த நாள்களில் துப்பாக்கிச் சூட்டில் பலியாகினர். இதற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் சர்வதேச மன்னிப்புச்சபையினால் அதன் உத்தியோகபூர்வ டுவிட்டர் பக்கபதிவிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் பொலிஸ் பாதுகாப்பின் கீழிருந்த இருவர் உயிரிழந்துள்ளனர். இச்சம்பவம் தற்போது சட்டத்திற்கு முரணாகத் தண்டனை வழங்கும் போக்கு அதிகரிக்கலாம் என்ற விசனத்தை ஏற்படுத்தியுள்ளது. இதுவிடயத்தில் உரிய அதிகாரிகள் நியாயமானதும் சுதந்திரமானதுமான விசாரணைகளை முன்னெடுப்பதுடன், இச்சம்பவத்திற்குப் பொறுப்புக்கூறவேண்டியவர்களை சட்டத்தின் முன்நிறுத்தவேண்டும்.

இவ்விடயம் தொடர்பில் கடுமையான கண்டனத்தை வெளியிட்டிருக்கும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், உரியவாறு விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்என்றும்வலியுறுத்தியிருக்கிறது. பொலிஸ் காவலின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களை முறையாகக் கவனிப்பதுடன் அவர்களை மனிதாபிமானத்துடன் கையாள வேண்டிய பொறுப்பு அரசுக்கு இருக்கின்றது.

எனினும் இவ்வாறான சம்பவங்களுக்கு உரிய தண்டனைகள் வழங்கப்படாமல்இருப்பது, அதிகாரிகள் பொறுப்புணர்வுடன் செயற்படுவதை மறுதலிப்பதாக அமைகின்றது என்று அப்பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# வத்தளை தடுப்பூசி நிலையத்தில் பொது மக்கள் மத்தியில் பதற்றம்

## திடீரென ஊசி ஏற்றல் ரத்தானதால்

கொழும்பின் புறநகர் பகுதியான வத்தளை பிரதேசத்தில் கொரோனாத் தடுப்பூசி மையத்தில் நேற்றுக் காலை தடுப்பூசி பெற வந்த மக்கள் திருப்பி அனுப்பப்பட்டமையால் பதற்ற நிலை ஏற்பட்டது.

கொழும்பின் புறநகர் பகுதியான வத்தளை பிரதேசத்தில் வசிப்பவர்களுக்கு நேற்று முன்தினம் வத்தளையில் – ஹெந்தல வீதியில் அமைந்துள்ள கெரவலபிட்டி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் சினோபோர்ம் தடுப்பூசி வழங்கப்பட்டது. தடுப்பூசி வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் தொடரும் என பொலிஸ் மற்றும் சுகாதார அதிகாரிகளால் நேற்றைய தினம் பொது மக்களுக்கு தெரிவிக் கப்பட்டது.

இதற்கமைய தடுப்பூசியை பெற்றுக்கொள்வதற்காக பலர் நேற்று அந்த இடத்திற்கு வந்து அதிகாலை முதல் வரி சையில் காத்திருந்தனர். எனினும், சுகாதார அதிகாரிகளும் பொலிஸாரும் நேற்றுக்காலை 9 மணியளவில் அந்த இடத்திற்கு வந்து தடுப்பூசி வழங்கும் செயற்பாடு இடைநிறுத் தப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இது தொடர்பிலான அறிவித்தல் பலகை வெளியில் வைக்கப்பட்டுள்ளதாக அவர்கள் கூறினர். எனினும் அத்த கைய அறிவித்தல் எதுவும் காணப்படவில்லை என பொதுமக்கள் கூறினர். இதனால் பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பொது மக்களுக்கு இடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட நாள்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரமே தடுப்பூசி வழங் கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், தடுப்பூசி வழங்கப்படும் நாள்கள் குறித்து தங்களுக்கு அறிவிக்கப்படவில்லை எனத் தடுப்பூசி பெற வந்த பொதுமக்கள் குறிப்பிட்டுள்ளனர். சில தாதியர் கள் சம்பவம் தொடர்பில் பொதுமக்களிடம் மன்னிப்பு கோரினர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இனி வீட்டிற்கு உள்ளேயும் முகக்கவசம் அவசியமாகும்

கொழும்பு, மே 17

மக்களின் பெறுப்பற்ற நடத்தை காரணமாகவே கொவிட் தொற்று பரவியதாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கீர்த்தி லால் துடுவகே தெரிவித்துள்ளார்.

அரசு மற்றும் சுகாதார பிரிவினர் நூற்றுக்கு 90 வீதமான நடவடிக்கைகளை சரியாக முன்னெடுத்திருந்தனர் எனவும் குறிப்பிட்டார்.

தற்போதைய நிலையில் வேலைக்காக வெளியில் சென்று வரும் அனைவரும் வீட்டிற்கு உள்ளேயும் முகக்கவசம் அணிய வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தடுப்பூசி வழங்கும் நிகழ்வை அடுத்து மக்களுடன் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

# பொல்லால் தாக்கி ஒருவர் படுகொலை

கெக்கிராவ–குடாகெகிராவபகுதியில்பொல்லுஒன்றினால் தாக்கப்பட்டு 41 வயதான நபர் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் தம்புத்தேகம நீதிவான் நீதிமன்றில் அலுவலக ஊழியராகப் பணிபுரிபவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவருக்கும், மற்றொரு நபருக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு மோதலாக மாறியதை அடுத்து இவர் இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் சம்பவ இடத்திலிருந்து தப்பிச்சென்றுள்ளார். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# களியாட்டத்தில் ஈடுபட்டனராம் 2 பெண்கள் உட்பட 7 பேர் கைது

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி களியாட்ட நிகழ்வொன்றில் ஈடுபட்ட 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களுள் இரு பெண்களும் உள்ளடங்குகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நேற்று இரவு ராஜகிரிய பகுதியில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்களிடம் இருந்து மதுபானம் மற்றும் ஐஸ் போதைப் பொருள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் நிலைமை இலங்கையிலும் வரும்!

## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம் ஆருடம்

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களை ஒழுங்காகப் பின்பற்றாவிட்டால் இந்தியா போன்றதொரு நிலைமை உருவாகுமென பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

நாடுமுழுவதும் முடக்கல் நிலை காணப்படும் காலப்பகுதியில் பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளவேண்டுமென்று தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தற்போது நிலவிவரும் கொரோனா நெருக்கடி நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்காகப் போராடும் அனைத்து தரப்பினருக்கும் பொதுமக்கள் தங்கள் ஆதரவை வழங்கவேண்டுமென பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பொதுச்செயலாளர் பாலசூரிய வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கம் அறிவித்துள்ள போக்குவரத்து கட்டுப்பாடுகளைப் பொதுமக்கள் பின்பற்ற வேண்டும், அடுத்த மூன்று நாள்களுக்கு நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தவேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசாங்கம் நிலைமையின் பாரதூர தன்மையை உணர்ந்து கொள்வது முக்கியமானதெனத் தெரிவித்துள்ள அவர், வைத்திய சாலைகள் சவாலான நிலையை எதிர்கொள்கின்றன, வைத்தியசாலைக் கட்டில்கள் நிரம்பிவிட்டன, சுகாதாரப் பணியாளர்கள் திணறுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகளின்போது தவறான விதத்தில் நடந்துகொள்வதைப் பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ளவேண்டும். சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றவேண்டும் எனவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி வழங்கப்படும் நிலையங்களுக்கு குடும்பத்தவர்கள் உறவினர்களை அழைத்து வருவதை தவிர்க்கவேண்டுமென தெரிவித்துள்ள அவர், ஒருவர் வசிக்கும் பகுதி போன்றவற்றை உறுதி செய்த பின்னரே தடுப்பூசி வழங்கப்படுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றாவிட்டால் இந்தியா போன்றதொரு நிலைமை உருவாகுமெனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# திருமலையில் 24 மணி நேரத்தில் ஐந்து தொற்றாளர்கள் உயிரிழப்பு

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 24 மணித்தியாலத்திற்குள் கொரோனாத் தொற்றாளர்கள் ஐந்து பேர் மரணித்துள்ளனர் எனவும் புதிதாக 55 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக இணங்காணப்பட்டுள்ளனர் எனவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வீ.பிரேமானந் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் 15 ஆம் திகதி காலை 10 மணி முதல் நேற்றுக் காலை 10 மணி வரை கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில்மாவட்டத்தில் 5 பேர் மரணித்துள்ள னர் எனவும் 55 பேர் கொவிட் - 19 தொற்றாளர்களாக இனங் காணப்பட் டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை 57 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் 206 பேருக்கு அன்டிஜன் பரிசோதனைமேற்கொள்ளப்பட்ட நிலையில் மூதூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 22 பேரும், திருகோணமலை பிராந்தியத்தில் 11 பேரும், கிண்ணியாவில் 6 பேரும், குறிஞ்சாங் கேணியில் 6 பேரும், குச்சவெளியில் நான்கு பேரும், தம்பலகாமம், உப்புவெளி மற்றும் கந்தளாய் பிரதேசங்களில் தலா இருவர் வீதமும் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளனர் எனவும் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

மேலும் திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை 2,150 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ள நிலையில் மே மாதம் முதலாம் திகதி தொடக்கம் நேற்று 16ஆம் திகதி வரை 709 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அத்துடன் கிழக்கு மாகாணத்தில் 71 தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும், மூன்றாவது அலையில் 2,538 பேர் அங்கு தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் எனவும் கிழக்குமாகாண சுகாதார சேவைகள் பணியக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

POSITIVES

| Region | Total | Cured | Death | Active |
|---|---|---|---|---|
| Trincomalee | 2119 | 1732 | 31 | 356 |
| Batticaloa | 1432 | 1226 | 19 | 187 |
| Ampara | 1136 | 892 | 8 | 236 |
| Kalmunai | 1556 | 1519 | 13 | 24 |
| Total | 6243 | 5369 | 71 | 803 |

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தொற்றாளருக்கு வீட்டில் சிகிச்சை

**கொரோனாப் பெருந்தொற்றை அடுத்து தீர்க்கமான சில முடிவுகளை அரசு எடுத்திருப்பது இப்போது சர்ச்சைக்குள்ளாகி யிருக்கின்றது.**

**கொரோனாவை அடியோடு ஒழிக்க முடியாது, அதனோடு சேர்ந்துதான் – அதனை எதிர்கொண்டபடிதான் – வாழவேண்டும், அதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்று தொற்றோடு சமரசத்துக்கு நாடுகள் பலவும் வந்த போதே இப்படியான சிக்கல்கள் எல்லாவற்றுக்கும் முகம் கொடுக்கவே நேரும் என்பதும் எதிர் பார்க்கப்பட்டதுதான்.**

**அப்படி கொரோனாத் தொற்றுக்கு முகம் கொடுத்தபடி, இயன்ற வரை அதைக் கட்டுப்படுத்தி, தொற்றுப் பரவலைத் தவிர்த்தவாறு, இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதைத் தவிர வேறு மார்க்கமில்லை என்ற யதார்த்தத்தை இலங்கையும் புரிந்து கொண்ட போது தான், ஆரம்பத்தில் நாடப்பட்ட முடக்கங்கள் எல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகத் திறந்து விடப்பட்டன.**

**என்றோ ஒரு நாள் கொரோனாத் தொற்றுப் பரவல் எல்லை மீறி, நாட்டின் சுகாதார – மருத்துவத் துறை அந்தச் சவாலை எதிர்கொள்ள முடியாத நிலைமை வரும்போது நோயாளர்களை வீட்டில் வைத்துப் பராமரிக்கும் இக்கட்டும் வரும் என்பதும் அப்போதே எதிர்பார்க்கப்பட்டதே.**

**அது – அந்த நிலைமை – இவ்வளவு தூரம் விரைந்து வரும் என்பதுதான் எதிர்பார்க்காத விடயமேயன்றி, அந்தப் பிரச்சினை அல்ல.**

**கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட போதிலும், நோய் அறிகுறி காட்டாத நோயாளர்கள் இன்று முதல் வீட்டிலேயே இருந்து சிகிச்சை பெற அனுமதிக்கப்படுவர் என்று ஆரம்ப சுகாதார இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்திருக்கின்றார்.**

**இந்த விடயத்தில் சாதகமான விடயங்களும் உண்டு. பாதகமான அம்சங்களும் உள்ளன.**

**தொற்று அடையாளம் காணப்படுவோர் எல்லோரையும் ஆஸ்பத்திரிகளில் அனுமதித்து, நோய் மாறும் வரை சிகிச்சை அளிப்பது என்றால், இன்றைய நிலையில் தினசரி புதிது புதிதாக 2 ஆயிரத்து ஐந்நூறு பேருக்கு இடமளிக்க வேண்டியிருக்கும். தினசரி சுமார் ஆயிரத்து ஐந்நூறு பேர் சிகிச்சை முடிந்து வெளியேறுகின்றமையால், தினசரி புதிதாக மேலும் ஆயிரம் பேருக்காவது ஆஸ்பத்திரிகளில் இடம் தேட வேண்டியிருக்கும்.**

**தொற்றால் பீடிக்கப்படும் எல்லோரும் நோய் உபாதை, பாதிப்புக்கு உள்ளாகின்றனர் என்பதல்ல. சுகதேகிகளும், ஆபத்தான வயதுப் பிரிவுகளைச் சாராதோரும் இயல்பாகவே நோயை எதிர்த்தெழுந்து மீண்டு வருகின்றனர். சில சமயங்களில் சில மருந்துகளை அவர்களுக்கு வழங்க வேண்டியிருக்கின்றது. அவ்வளவே.**

**இத்தகைய ரகத்தைச் சேர்ந்தோரை பல நூற்றுக் கணக்கில் தினசரி ஆஸ்பத்திரிகளில் சேர்த்து, அவர்களுக்கும் இடங்களை ஒதுக்கி, ஆஸ்பத்திரி மற்று மருத்துவர்களின் கவனிப்பையும் சிரத்தையையும் அவர்கள் பக்கம் திருப்புவதால், உண்மையில் அதிகம் பாதிக்கப்பட்டு, நோய் உபாதைகளினால் அதிக சிரமத்தை எதிர்கொள்வோரைக் கவனிக்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு வருகின்றது.**

**இதன் காரணமாக நோய்த் தொற்றின் குணங்குறிகள், பாதிப்புகளை அதிகம் வெளிப்படுத்தாத, இயல்பாகவே குணம் பெறக் கூடிய உடல் வாகு அல்லது தைரியத்தைக் கொண்ட நோயாளிகளை ஆஸ்பத்திரிகளுக்கு எடுக்காமல் – அவரவர் வீடுகளில் வைத்தே – சிகிச்சைக்கு உட்படுத்தி, குணம் பெற வைப்பதுதான் அரசின் இப்போதைய திட்டம்.**

**அப்படி வீடுகளில் சிகிச்சை பெறுவோரைக் கண்காணித்து, உரிய மருத்துவ வசதிகளை சீராக வழங்கி, ஓர் ஒழுங்கு முறையில் இப்பணியை ஆற்றுவதற்கான ஆளணி, அம்பு, வசதிகள், மற்றைய ஏற்பாடுகள் சரிவர இல்லை என்ற பொது சுகாதாரப் பரிசோதகர்களின் கவலை – விசனம் – கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய முக்கிய விடயமே.**

**சரியோ, பிழையோ தொற்றுக்குள்ளானவர் அடையாளம் காணப்பட்டதும், பூரண குணமடையும் வரை ஆஸ்பத்திரிக்குள் முடக்கப்படுவதால் – வெளிப்பரவல் குறைகின்றது. ஆஸ்பத்திரியில் கிசிச்சை என்பதும் தொற்றுக்குள்ளானவருக்கு ஒரு வகையில் முடக்கலும் தனிமைப்படுத்தலும்தான்.**

**அத்தகையவரை ஆஸ்பத்திரிக்கு அனுப்பாமல் வீட்டில் வைத்துப் பராமரித்து, சிகிச்சை அளிப்பது என்பது, அந்த நபரிடமிருந்து வீட்டாருக்கும், அயலவர்களுக்கும் புதிய தொற்றுகளை ஏற்படுத்த வாய்ப்பு அளிப்பதாகி விடலாம்.**

**அது மாத்திரமல்ல, வீடுகளில் தொற்றாளர்களை வைத்துப் பராமரிப்பது, எல்லா வீடுகளிலும் சாத்தியமானதல்ல. அது வீட்டின் கட்டமைப்பு, சூழல் மற்றும் வசதிகளைப் பொறுத்ததும் கூட. சரியாகக் கையாளாவிட்டால் இத்தகைய விடயங்கள் சமூகப் பிரச்சினைகளையும் தோற்றுவித்துவிடும்.**

**ஆகவே, இந்த முடிவை நடைமுறைப்படுத்த ஆரம்பிக்க முன்னர் அரசுத் தரப்பு – சுகாதார அமைச்சு – ஒன்றுக்கு இரண்டு தடவைகள் சிந்திப்பது நல்லது.**

## ஜனாதிபதித் தேர்தலில் சீனா வழங்கிய நிதி உதவிக்கு கைமாறே கொழும்புத் துறைமுக நகரத் தாரைவார்ப்பு!

### ஜே.வி.பியின் யாழ் அமைப்பாளர் சந்திரசேகரன் சாட்டை

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார சூழ்நிலை காரணமாக மக்கள் அரசியல் சூதாட்டம் பற்றி சிந்திக்க முடியாத நிலையில் உள்ளனர் என மக்கள் விடுதலை முன்னணியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் கட்சி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனை தெரிவித்தார்.

எதிர்வரும் புதனன்று நாடாளுமன்றத்தில் துறைமுக நகர சட்டமூலம் நிறைவேற்றப் படவுள்ளது. அவசர அவசரமாக இவ்வாறான ஒரு சூழலிலேயே சீனாவிற்கு நகரத்தை முற்று முழுதாக வழங்கி சீனாவின் பிராந்தியமாக இதை மாற்றுகின்ற நடவடிக்கையை எடுப்பது ஏன் என அவர் அங்கு கேள்வி எழுப்பினார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது அல்லது வழமையான ஜனாதிபதித் தேர்தலின் போது இந்த நாட்டின் தலைவர்களை உருவாக்குவதற்காக நிதி வழங்கிய அவர்களுக்கு கொடுக்கின்ற / நிறுவனம்தான் இந்த துறைமுக நகர அபிவிருத்தியை மேற்கொள்ளும் நிறுவனம். முன்னைய ஜனாதிபதி மற்றும் அவருடைய மனைவி அவர்களின் பெயரால் பல கோடிக் கணக்கான ரூபா நிதி பரிமாறப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

அந்த அன்பளிப்புக்கான நட்ட ஈட்டை வழங்குவதற்காகவே இன்று இந்த சீன நிறுவனத்திற்கான துறைமுக சட்டமூலத்தை அவசர அவசரமாக நிறைவேற்ற உள்ளனர்.

இவ்வாறான ஒரு சட்ட மூலம் நடைமுறைப்படுத்தப் படுமாக இருந்தால் எமது நாட்டினுடைய இறைமை குழிதோண்டி புதைக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும்.

அது முற்று முழுதாக



சீனாவுடைய பிராந்தியமாகும். எமது நாட்டு சட்டங்களுக்கு உட்படாத எமது உள்ளூராட்சி முறைமைக்கு உட்படாத எமது நிதி சட்டங்களுக்கு உட்படாத எமது கணக்காய்வாளர் சட்டத்திற்கு உட்படாத அல்லது கணக்காய்வாளர் அறிவிக்கப்படாத எங்களது முதலீட்டு சபைச் சட்டத்துக்கு உட்படாத ஒரு தனிநாட்டை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கையே இன்றைக்கு இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. - என்றார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பிலும் அவர் கருத்து வெளியிட்டார்.

## தொற்றுடன் இரட்டைக் குழந்தை பெற்ற தாய் நலமாக சிசுக்களுடன் வீடு மீண்டார்



யாழில் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி சிகிச்சைப் பெற்று வந்த பெண்ணொருவர் இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்த நிலையில், தாயும் சேய்களும் நலமாக வீடு திரும்பியுள்ளனர்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியாழ்.போதனாவைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த கர்ப்பிணி பெண், கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரட்டை குழந்தைகளை பிரசவித்திருந்தார்.

இந்த நிலையில் தாய்க்கு தொடர்ந்து வைத்தியர்களின் விசேட கண்காணிப்புடன் சிகிச்சை வழங்கப்பட்டு வந்தது. அதேநேரம், பிறந்த குழந்தைகளுக்கு தொற்று ஏற்பட்டிருக்கவில்லை.

தாய் தொற்றில் இருந்து பூரண குணமடைந்துள்ள நிலையில், நேற்று முன்தினம் தனது இரட்டைக் குழந்தைகளுடன் அவர் வீடுதிரும்பியுள்ளார்.

## கல்குடாவில் மிதிவெடி மீட்பு

மட்டக்களப்பு மே 17

மட்டக்களப்பு கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள விநாயகபுரம் பகுதியில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் மிதி வெடி ஒன்றை, நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை மீட்டுள்ளனர் எனக் கல்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து அந்தப் பகுதியில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் மேற்படி மிதி வெடி மீட்கப்பட்டுள்ளது.

## வவுனியா கோடாலிபறிச்சான் காட்டுப்பகுதியிலும் கடைபரப்புகின்றது தொல்பொருள் திணைக்களம்

வவுனியா வடக்கில் வெடுக்குநாறிமலையைத் தொடர்ந்து நைனாமடு கிராமசேவகர் பிரிவின் கோடாலிபறிச்சான் காட்டுப்பகுதியில் விகாரையுடன் தொடர்புடைய இடிபாடுகள் உள்ளன என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

இலங்கை படையினரின் உதவியுடன் தொல்பொருள் திணைக்களத்தினால் புராதன நினைவுச்சின்னம் ஒன்று இனம் காணப்பட்டுள்ளதாகத் தொல்பொருள் திணைக்கள இராஜாங்க அமைச்சர் விதுரவிக்கிரமநாயக்க தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

காட்டுப்பகுதியில் உள்ள தொல்பொருள் தடயங்கள் தொடர்பில் வவுனியா நெடுங்கேணி வீதியில் உள்ள 17 ஆவது விஜயபாகு படையணி தளபதியால் வவுனியா தொல்பொருள் திணைக்களத்திற்கு தெரிவித்த தகவலுக்கு அமைய அந்தப் பகுதி தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப் பட்டுள்ளது.

8 கற்தூண்கள் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடம் சிதைவடைந்த நிலையில் காணப்படுவதாகவும், அந்தப் பகுதியில் பழைய கட்டடங்களின் கல், ஓடுகள் 100 மீற்றர் வரையான சுற்றுப்பகுதிகளில் காணப்படுவதாகவும் புதையல் தோண்டும் நபர்களால் முக்கிய



பகுதி சிதைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கு காணப்படும் தொல்பொருள் எச்சங்கள் கி.மு.4 முதல் 8 ஆம் நூற்றாண்டிற்கு இடைப்பட்டனவாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பகுதி வனவளத்திணைக்களத்திற்கு சொந்தமான காட்டுப்பகுதியில் காணப்படுகிறது.

ஜனனீ தேவானந்த்
(முதுநிலை விரிவுரையாளர் -
(தகவல் தொழில்நுட்பம்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

# மெய்நிகர் வகுப்பறை 20





## Online Classroom

இலங்கையில் கொரோனா வைரஸ் வேகமாக பரவிவரும் சூழலில் புலமையாளர்களின் பணியின் முக்கியத்துவம் பற்றி சென்ற தொடரில் பார்த்தோம். உண்மையைச் சொல்லுகின்றபோது அது கசக்கின்ற போது, முகம்சுழிக்கின்ற நிலையை காணமுடிகிறது. எங்களைச் சிவனே என்று சீவிக்க விடுகிறார்களில்லை என்று கொதித்தெழுவோரும் இருக்கிறார்கள். உண்மையின் உறைப்பு உணர்ந்தோரும் பாராட்டி தட்டிக் கொடுப்போரும் நம்மதியில் உள்ளனர். கொரோனா வைரஸ் தொற்றைக் கண்காணிப்பதற்கு படித்தவர்கள் உதவ முன்வர வேண்டும் என்பதே பலரதும் விருப்பம்.

இன்று கிடைக்கப்பெறும் மெய்நிகர் வெளி தொழில்நுட்பங்கள், அதன் மொபைல் செயலிகள் அரசாங்கங்கள், மருத்துவமனைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பிற குழுக்கள் போன்றன இந்தப் பேரிடர் காலத்தில் பொதுமக்களுக்கு உதவி செய்ய முடியும் என்பதை துலக்குகின்றன.

கொரோனா வைரஸ் அறிகுறிகளை சுயமாக இனங்காண்பதற்கு வசதியாக தற்போது பல செயலிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதாவது ஒருவர் தனது சொந்த ஆரோக்கியத்தைக் கண்காணிக்க இந்தச் செயலிகள் உதவுகின்றன.




குறிப்பாக COVID Symptom Study, COVID Symptom Tracker போன்ற செயலிகள் தனிநபர் உடல்நலம் மற்றும் கொரோனா வைரஸ் தாக்கம் பற்றிய தொடர் கேள்விகளின் மூலம் தனிநபர்களுக்கு வழிகாட்டுகின்றன. நீங்கள் ஒரு மருத்துவரைச் சந்திக்க வேண்டிய நிலையில் இருக்கிறீர்களா என்பதைக் கண்டுபிடிக்க இது உதவுகிறது. இது சமூக தொலைவு, சுய தனிமை மற்றும் அறிகுறி கண்காணிப்புக்கான உதவிக்குறிப்புகளையும் பகிர்ந்து கொள்கிறது. இது ஐபோன்கள் மற்றும் இணையத்தில் (www.apple.com/covid19) பயன் பாடாகக் கிடைக்கிறது.

இன்று வடஇலங்கையைப் பொறுத்தமட்டில் நோய்தொற்றுத் தொடர்பான தடமறிவது கடினமான ஒன்றாக மாறியுள்ளது. நிறுவனங்களைப் பொறுத்தமட்டில் மிகச்சிரமத்தை எதிர்நோக்குகிறார்கள். இதற்கென பல செயலிகள் இன்று கிடைக்கின்றன. ஒரு தொற்றாளர் ஒருவருடன் தொடர்பு கொண்ட நபர்களைக் கண்டறிய சுகாதாரத் துறைகள் இந்தச் செயலிகளைப் பயன்படுத்தலாம். இந்த மெய்நிகர் தொழில்நுட்பப் பயன்பாட்டின் மூலம் தரவுகளை விரைவாகப் பகிரவும் அதற்கான செயல்முறையை விரைவாகவும் பயனுள்ளதாகவும் மாற்ற இது உதவுவதோடு மக்களின் இயக்கத்தை இனங்காணவும் உதவுகின்றன. இதனால் சிலர் வைரஸுக்கு ஆளாகியிருக்கக் கூடிய நபர்களை அடையாளம் காண முடியும், எனவே அவர்கள் தங்களை தனிமைப்படுத்தவும் அறிகுறிகளைப் பார்க்கவும் முடிகிறது.

அப்பிள் மற்றும் கூகிள் ஆகியவை புளூடூத் மற்றும் ஒரு தொலைபேசியின் இயக்க முறைமையைப் பயன்படுததி ஒரு தளத்துடன் தொடர்பைப் பேணி, சிலர் எங்கு செல்கிறார்கள், யாரைச் சந்திக்கிறார்கள் என்பதைக் கண்காணிக்கும் பயன்பாட்டைப் பற்றி எச்சரிக்கையாக இருக்க முடியும். கூகிள் மற்றும் அப்பிள் ஆகியவை தங்கள் செயலிகளின் மூலத் தரவைப் படிக்க முடியாது என்று கூறுகின்றன. அதற்கு பதிலாக, பயன்பாட்டு – நிரலாக்க இடைமுகம் application-programming interface (API) மூலம் இதில் கிடைக்கின்ற தகவல்கள் சுகாதார நிறுவனங்களுக்கு மட்டுமே கிடைக்கும். தொடர்பு தடயமறிவதற்காக புழக்கத்தில் உள்ள சில செயலிகள் Crush COVID RI, Care19 Diary, GuideSafe, COVIDWISE.

Coronavirus Health Monitoring Apps

கொரோனா வைரஸ் தொடர்பான தனிநபர் சுகாதார நிலைமைகளைக் கண்காணிப்பதற்கான செயலிகள் தற்போது கிடைக்கின்றன. சிறப்பு சென்சார்களின்துணையுடன்அதனுடன்இணைந்து, மருத்துவர்கள் தங்கள் நோயாளிகளின் ஆரோக்கியத்தைக் கண்காணிக்க முடியும். மருத்துவ ஊழியர்கள் சேவையை எளிதாக்க இந்தச் செயலிகள் உதவுகின்றன. அவர்கள் மக்களின் முக்கிய அறிகுறிகளின் தரவைச் சேகரித்து அவர்களுடன் தொடர்பு கொண்டு அறிகுறிகளைப் பற்றி கேள்விகளைக் கேட்கலாம், பின்னர் அந்த தகவல்களை சுகாதாரத்துறையினருக்கு அனுப்பலாம்.

### Pulse oximeter apps

கொரோணா தொற்று ஏற்பட்ட நோயாளிகள் சிலருக்கு மூச்சுத்திணறல் , சுவாசப்பிரச்சினைகள் இனங்காணப்படுகின்றன. அவ்வாறானவர்கள் தமது இரத்தத்தில் எவ்வளவு ஒக்ஸிஜன் உள்ளது என்பதை அளவிட முடியும். அதற்கான செயலிகள் இணையத்தில் கிடைக்கின்றன. இது துடிப்பு ஆக்சிமெட்ரி என்று அழைக்கப்படுகிறது. குறைந்த ஒக்ஸிஜன் அளவு கொவிட் – 19 இன் அடையாளமாக இருக்கலாம். ஆனால் ஒக்ஸிஜன் அளவை அளவிடுவதில் இந்த பயன்பாடுகள் துல்லியமாக இல்லை என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### Thermometer apps

ஸ்மார்ட் தெர்மோமீட்டர்கள் ஒருவரின் வெப்பநிலையைக் கண்காணிக்க உதவமுடியும். இது நிகழ்நேர ‘சுகாதார வானிலை’ வரைபடத்தை உருவாக்க துணைபுரியமுடியும். நாடு முழுவதும் உள்ள இந்தச் செயலிப்பயன்பாட்டிலிருந்து தரவை சேகரிக்க முடியும்.

### Coronavirus Research Apps

சில கல்லூரிகளும் பல்கலைக்கழகங்களும் கொவிட் – 19 இன் பரவலையும் அதன் விளைவுகளையும் கண்டறிந்து ஆய்வு செய்ய மொபைல் பயன்பாடுகளை உருவாக்கியுள்ளன. எதிர்கால அலைகளைத் தடுப்பதற்கான வழிகளைக் கண்டறிய ஆராய்ச்சியாளர்களுக்கு இந்தச் செயலி உதவுகின்றது. இதில் பயனர்கள் தங்கள் உடல்நலம் மற்றும் அறிகுறிகளைப் பற்றிய தரவைச் சமர்ப்பிக்கின்றனர். ஜான்ஸ் ஹாப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் கொவிட் கட்டுப்பாட்டு பயன்பாடு ஒவ்வொரு நாளும் ஒருவர் உடல் வெப்பநிலையை உள்ளிட அனுமதிக்கிறது, இந்த நோய்க்கான அடுத்த ‘ஹாட்ஸ்பாட்’ எங்கு இருக்கக்கூடும் என்பது குறித்த ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு யோசனை கிடைக்கும்.

### Social Distancing Apps

சமூகத் தொடர்பைக் குறைப்பதற்கான வழிகளைக் கண்டுகொள்வதற்கு செயலிகள் அறிமுகமாகியுள்ளன. மற்றவர்களுடனான தொடர்பைக் குறைக்க நிறைய வழிகள் உள்ளன. எடுத்துக்காட்டாக, நெரிசலான காத்திருப்பு பகுதிகளைத் தவிர்க்க இந்தச் செயலி உதவுகிறது. நெரிசலிலிருந்து தவிர்ப்பதற்கு வாடிக்கையாளர்களை எச்சரிக்க உணவகங்கள் அவற்றைப் பயன்படுத்தலாம். தொடர்பு இல்லாத விநியோகங்களை உறுதிப்படுத்த டெலிவரி டிரைவர்களுக்கும் அவை உதவுகின்றன. இதே போன்று மற்றவர்களிடமிருந்து பாதுகாப்பான தூரத்தை வைத்திருக்க உதவ சில செயலி உதவுகிறது. ஒருவர் தனக்கு பக்கத்தில் உள்ள மற்றொரு நபருக்கும் இடையிலான இடத்தை சரிபார்க்க இந்தச் செயலி உதவுகின்றன.

கொவிட் வைரஸ் தாக்கத்தின் விளைவாக, அதிலிருந்து பாதுகாப்பதற்கு மெய்நிகர் வெளி இன்று வாய்ப்பாக காணப்படுகின்றது. இலங்கை போன்ற நாடுகள் இவ்வாறான தேர்ந்தெடுக்கப்பட்ட செயலிகளைப் பயன்படுத்துவதால் பயன்பெறமுடியும்.



காலைக்கதிர் Kalaikkathir

## சீரற்ற காலநிலையை அடுத்து ஏற்படுத்தப்படும்

# இடைத்தங்கல் முகாம்களில் கொரோனாப் பரவும் அபாயம்

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கை அதிகரித்தால் உயிரிழப்போரின் எண்ணிக்கையும் அதிகரிப்பது இயல்பானதாகும் என்று தொற்று நோயியல் பிரிவின் பிரதானி விசேட வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் இது தொடர்பாக விசேட வைத்தியர் சுதத் சமரவீர மேலும் தெரிவித்தமை வருமாறு:-

இந்த நிலைமையை கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரப் பிரிவு ஆகக்கூடிய முயற்சிகளை மேற்கொண்டுவருகிறது.

சீரற்ற காலநிலையை அடுத்து ஏற்படுத்தப்படும் இடைத்தங்கல் முகாம்களில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படுவதற்கான அபாயம் ஏற்பட்டுள்ளது.

சீரற்ற காலநிலை காரணமாக வெள்ளம், மண்சரிவு முதலானவை தற்போது இடம் பெறுகின்றன. இதன் போது இடம்பெயரும் மக்கள் தங்கும் இடைத்தங்கல் முகாம்களில் கொரோனாத் தொற்றுப் பரவல் அபாயம் உண்டு. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இவர்கள் மத்தியில் கொரோனாத் தொற்றாளர் ஒருவர் இருந்தால் அவர் மூலம் மற்றவர்களுக்கு தொற்று பரவும் நிலை உண்டு. அதனால் இவ்விடயத்தில் கூடுதலான கவனம் செலுத்த வேண்டும்.

இத்தகைய முகாம்களுக்குச் சென்றால் முகக்கவசம் அணிந்திருப்பது மிக முக்கியமானது. அனைவரும் ஒன்று கூடாது குடும்பங்களாகத் தனித்தனியாக இடைவெளியை முன்னெடுத்து இருப்பது மிக முக்கியமானது. அத்தோடு முகாமிலுள்ள மக்கள் சுகாதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும். என அவர் குறிப்பிட்டார்

## கொழும்பு மாநகரை முடக்கினாலும் பிலியந்தலவை காப்பாற்ற முடியாது

### வைத்திய அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொவிட் ஒழிப்பு செயற்பாடுகளுக்காக விஞ்ஞான ரீதியாக எடுக்கப்படும் உடனடியாகத் தீர்மானங்களை அரசியல் அல்லது வேறு அழுத்தங்கள் காரணமாக மாற்றியமைத்தமைக்கான பிரதிபலனைத் தற்போது பிலியந்தல மக்கள் அனுபவித்து வருகின்றனர் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொழினுட்ப தீர்மானங்களை மாற்றுவது எந்த வகையிலும் சரியானது அல்ல எனவும், அது மக்களுக்கு இழைக்கும் அநீதி எனவும், அந்தச் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் மருத்துவர் பிரசாத் கொலம்பகே கூறியுள்ளார்.

கொழும்பு மாவட்டத்தில் அடையாளம் காணப்பட்ட அதிகளவான கொவிட் தொற்றாளர்களில் 126 பேர் பிலியந்தல பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்.

தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையில் கொழும்பு மாவட்டத்தை முடக்கினாலும் பிலியந்தல பிரதேசத்தைக் காப்பாற்ற முடியாது என அந்த பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## மழை வெள்ளத்தால் இதுவரை 42 ஆயிரம் பேர் இடம்பெயர்வு

மழை வெள்ளம் மற்றும் நாட்டில் நிலவும் அசாதாரண காலநிலையின் காரணமாக இதுவரையில் நால்வர் உயிரிழந்துள்ளமையுடன் மேலும் இருவர் காயமடைந்துள்ளனர் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

அத்துடன் 7 மாவட்டங்களில் 11 ஆயிரத்து 74 குடும்பங்களைச் சேர்ந்த 42,252 பேர் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை களனி மற்றும் கிங் கங்கைகளின் நீர்மட்டம் மேலும் அதிகரித்து வருவதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

களனி கங்கையின் நாகலன்வீதி பகுதியில் மற்றும் கிங் கங்கையின் பத்தோகம பகுதியில் வெள்ள நீர் மட்டம் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதனால் குறித்த பகுதிகளில் இருப்பவர்கள் அவதானமாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.





## முழங்காவிலில் யானைகளால் பப்பாசி, வாழை மரங்கள் சேதம்

கிளிநொச்சி பூநகரி பிரதேச செயலக பிரிவிற்கு உட்பட்ட முழங்காவில் பகுதியில் நேற்று முன்தினம் இரவு விவசாயிகளின் தோட்டத்திற்குள் யானைகள் புகுந்து நூற்றுக்கணக்கான பப்பாசி மற்றும் வாழை மரங்களை சேதப்படுத்தி அழித்துள்ளன என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் விவசாயிகள் கருத்து தெரிவிக்கும் போது -

கடந்த காலங்களில் முழங்காவில் காட்டுப் பகுதியில் யானைகள் வருவதில்லை. தற்போது மக்கள் குடியிருப்புக்கள் இருக்கின்றன. அருகில் கடற்படையினர் இருக்கின்றனர். அவ்வாறு இருக்கும் போதும் யானைகள் வந்து எமது பயிர்களை சேதப்படுத்துகின்றன. - என்றனர்.

இங்கு வரும் யானைகள் அமைதியான முறையில் நாம் மாடுகளை மேய விடுவது போல் திறந்த பயிர் நிலத்தை மேய்ந்து விட்டு செல்கின்றன. அப்படி என்றால் பிற இடங்களில் இருந்து இங்கு கொண்டு வந்து விடப்பட்ட யானைகளா இவை எனச் சந்தேகம் எழுகின்றது என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். யானைகளின் சேதம் தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு அறிவித்தும் பயன் எதுவும் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உயிர் சேதங்கள் ஏற்படும்முன் உரியநடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## வவுனியாவில் தொற்று நீக்கும் செயற்பாடு இராணுவத்தினரால் நேற்று முன்னெடுப்பு





வவுனியாவில் கொரோனாத் தொற்று தீவிரம் அடைந்து வரும் நிலையில் நகரின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவத்தால் தொற்று நீக்கும் செயற்பாடுகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன.

வவுனியா சுகாதாரப் பிரிவினரின் ஆதரவுடன் வவுனியா நகரில் மக்கள் அதிகமாக வந்து செல்கின்ற இடங்களை மையப்படுத்தி கொரோனாத் தொற்று நீக்கும் செயற்பாடுகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக வவுனியா பழைய பஸ் நிலையம், புதிய பஸ் நிலையம், பசார் வீதி, பள்ளிவாசல் பகுதி, வங்கிகள், காசு பெறும் தன்னியக்க இயந்திரங்கள் உள்ள பகுதி, பஸ் தரிப்பிடங்கள், அரச அலுவலகங்கள், நகரின் பிரதான வீதிகள், கடைத் தொகுதிகள், மரக்கறிச் சந்தை என்பன இராணுவத்தினரால் கிருமி தொற்று நீக்கும் மருந்துகள் விசிறப்பட்டு சுத்தம் செய்யப்பட்டன.

இதில் இராணுவத்தினருடன் இணைந்து வவுனியா நகரசபையினர், சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் ஆகியோரும் தொற்று நீக்கும் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர்.

## புதுவிளாங்குளத்தில் 3ஆவது நாளாகவும் உயிருக்குப் போராடும் கொம்பன் யானை



வவுனியா, புளியங்குளம், புதுவிளாங்குளம் காட்டுப் பகுதியில் மூன்றாவது நாளாகவும் நேற்று யானை ஒன்று உயிருக்குப் போராடி வருகின்றது.

இந்தக் காட்டுப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் யானை ஒன்று கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து இந்த விடயம் தொடர்பில் வனவிலங்கு துறையினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அங்கு சென்ற வனவிலங்கு துறையினர், கால்நடை வைத்திய அதிகாரிகள் யானைக்கு சிகிச்சையளித்தனர். பௌத்த பிக்குகளால் யானை குணமடைய வேண்டி பிரித்தோதலும் மேற்கொள்ளப்பட்டது.

இருப்பினும், மூன்று நாள்கள் கடந்தும் யானை எழுந்து செல்ல முடியாது அப் பகுதியில் தொடர்ந்தும் உயிருக்குப் போராடி வருகின்றது. தந்தங்களையுடைய குறித்த யானை சுமார் 12 வயது மதிக்கத்தக்கது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இணையம், சமூகவலைத்தளங்கள் மூலமாக தமிழினவழிப்பு நாளை முன்னெடுக்க தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுத்துள்ளது.

# தனித்து நினைவேந்தி வலைதளங்களில் பகிர்ந்து கூட்டுப் பிரக்ஞையை வெளிப்படுத்துவோம்!



"இன்றைய நெருக்கடியான சூழலிலும் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நினைவுகூர்வதன் மூலம் 21 ஆம் நூற்றாண்டின் மனிதப் பேரவலத்தை உலகறியச் செய்வதும் அடுத்த தலைமுறை களுக்கு அதனைக் கடத்துவதும் எமது தலையாய கடமையும் பொறுப்புமாகும்.

## நாளைய முள்ளிவாய்க்கால் தினத்தை ஒட்டி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

தமிழர் தேசத்தை சிதைக்கும் நோக்கத்துடன் தமிழினத்துக்கு எதிராக சிறிலங்கா அரசு தொடர்ச்சியாக மேற்கொண்டுவந்த இனவழிப்பு யுத்தமானது 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்காலில் அதன் உச்சக்கட்டத்தை அடைந்து தமிழ் இனப் படுகொலையாக சர்வதேசத்தினதும் மனச்சாட்சிக் கதவுகளை உலுக்கியிருந்தது.

இவ்வாறு சர்வதேச சட்ட ஏற்பாடுகளுக்கு மாறாகவும் யுத்தநெறிமுறைகளுக்கு முரணாகவும் மனிதத்துவத்துக்கு எதிராகவும் சிறிலங்கா அரசினால் முள்ளிவாய்க்காலில் தமிழினம் கொத்துக்கொத்தாக கொன்றொழிக்கப்பட்டமையை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவேந்தல் வாரம் அதன் 12 ஆம் ஆண்டு நினைவு வாரமாக நினைவு கூரப்பட்டு வருகின்றது. தமிழின உரிமைப் போராட்டத்தைப் பயங்கரவாதமாக சித்திரித்துக்கொண்டு சிறிலங்கா அரசினால் காலம் காலமாக கட்டவிழ்த்துவிடப்பட்ட தமிழின அழிப்பு நடவடிக்கைகளையும், 2009 முள்ளிவாய்க்காலில் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், முதியவர்கள் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கானோர் படுகொலை செய்யப்பட்டும், பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டும், இளைஞர்கள், யுவதிகள் என ஆயிரக்கணக்கானோர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டும், பல ஆயிரக் கணக்கானோர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டும் சுமார் ஒரு லட்சத்து நாற்பத்தாறாயிரத்து எழுநூறுக்கும் அதிகமான தமிழ் மக்கள் இனவழிப்பு செய்யப்பட்டமையை தமிழினம் நினைவுகூரும் நாள்கள் இவையாகும்.

இவ்வாறு தமிழர்களின் உரிமைப் போராட்டம் 2009இல் தமிழின அழிப்பு யுத்தம் மூலமாக மௌனிக்கப்பட்டதன் பின்னர், தமிழ் மக்கள் மீதான இனவழிப்பு நீதிக்கான போராட்டத்தினை அடக்கியொடுக்கும் வகையில் சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் ஒடுக்குமுறைகளுக்கு அடிபணியாது அவற்றுக்கு எதிராகவும், கட்டமைப்புசார் இனவழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிராகவும் நாம் மக்களை அணி திரட்டி ஜனநாயக வழிமுறைகளில் போராடிவருகின்றமையுடன் சிறிலங்கா அரசினது அனைத்து அச்சுறுத்தல்களையும் தாண்டி முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புக்கு நீதி வேண்டி ஒவ்வொரு வருடமும் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவேந்தலை பொது அமைப்புக்களோடும், மக்களோடும் இணைந்து கூட்டாக முன்னெடுத்தும் வந்துள்ளோம்.

தற்போது முழுஉலகையும் உலுக்கிவரும் கொவிட் - 19 பேரழிவுப் பெருந்தொற்று அலை, இராணுவமயப்படுத்தப்பட்ட சிறிலங்கா அரசினது நிர்வாகக் கட்டமைப்பின் இயலாமையினால், முழு இலங்கை மக்களையும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது.

கொவிட் 19 பரவலை கட்டுப்படுத்துவதில் அரசின் தோல்வியை சுகாதாரத் துறையினர் குற்றஞ் சாட்டி வரும் அதேவேளை நாட்டில் சடுதியாக கொவிட் மரணங்களும் அதிகரித்துச் செல்வதனால் கொவிட் - 19 அலை தொடர்பாக சுகாதாரத்துறையினர் மிகக் கடுமையான எச்சரிக்கைகளை விடுத்தும் வருகின்றனர். ஆனால் அரசாங்கமோ கொவிட் - 19 அலை காரணமாக நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைகளை மூடிமறைத்து மக்களை தவறாக வழிநடாத்தி வருவதுடன் அரசின் தோல்வியை மூடி மறைக்க, சிங்கள மக்கள் மத்தியில் இனவாதத்தைத் விதைத்து தமிழ் மக்களுக்கு எதிராக அவர்களைத் தூண்டி இராணுவ அனுசரணையுடன் இனவாத செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது.

மேலும் வடக்கு கிழக்கு தமிழர் தாயகத்தில் தமிழ் மக்களின் இருப்புக்கு பெரும் சவாலாக கொவிட் - 19 அலை உருவெடுத்துள்ள நிலையில் சிறிலங்கா அரசினால் முடக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கு தாயகப் பிரதேசங்களில் கொவிட் - 19 பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளை பல நாள்கள் கடந்தும் வழங்க முடியாது சுகாதாரத் துறையினர் திண்டாடுகின்றனர். இப்பிரதேசங்களில் பொது மக்களுக்கான தடுப்பூசிகளை அரசு இன்னமும் வழங்கியிருக்கவுமில்லை.



இவ்வாறு தொற்று அதிகரித்துள்ள தாயகப் பிரதேசங்களில் பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்வதற்குத் தேவையான வளங்களை தேவைக்கேற்ப வழங்காது தொற்றாளர்கள் அனைத்து இடங்களுக்கும் எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லாது நடமாடும் அபாய நிலையை அரசு வேண்டுமென்றே தமிழர் தாயகப்பிரதேசங்களில் தோற்றுவித்துள்ளதா, முள்ளிவாய்க்கால் இன அழிப்பையொத்த இன்னொரு இன அழிப்பு யுத்தத்தை சிறிலங்கா அரசு கொவிட் - 19 பெருந்தொற்றின் மூலம் தமிழர் தாயகத்தில் கட்டவிழ்த்துவிட்டுள்ளதா என்ற சந்தேகங்கள் மக்கள் மத்தியில் வலுவாக எழுந்துள்ளன.

இன்றைய நெருக்கடியான சூழலிலும் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் இனவழிப்பை நினைவுகூர்வதன் மூலம் 21 ஆம் நூற்றாண்டின் மனிதப் பேரவலத்தை உலகறியச்செய்வதும் அடுத்த தலைமுறைகளுக்கு அதனைக் கடத்துவதும் எமது தலையாய கடமையும் பொறுப்புமாகும். மேலும் கொவிட் - 19 பரவலை கட்டுப்படுத்துவதில் தோல்வி அடைந்துள்ள அரசு, கொவிட்- 19 தொற்றிலிருந்துதமிழ்மக்களை பாதுகாக்க விசேட அக்கறை செலுத்தும் என எதிர்பார்க்க முடியாது. எனவே கொவிட் 19 பேரழிவுத் தொற்று வேகமாக பரவி வரும் நிலையில் பொறுப்பு வாய்ந்த அரசியல் தலைமையாய் எமது மக்களது பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும் எமக்குண்டு.



இந்நிலையில் முள்ளிவாய்க்காலில் கொன்றொழிக்கப்பட்ட எமது உறவுகளுக்கு சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினூடாக இனவழிப்புக்கான நீதியை வேண்டி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில், இனவழிப்பின் சாட்சியங்களாய் எமது ஆத்மாவை தினமும் உலுப்பிக்கொண்டிருக்கும் கொடூரமான இனவழிப்புச் சம்பவங்களை நினைந்து கறுப்புக்கொடிகளை பறக்கவிடுமாறும் கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதிநாளான 2021 - 05 - 18 ஆம் திகதி பொது இடங்களிலும், இல்லங்களிலும் ஒன்றுசேர்வதைத்/ ஒன்றுகூடுவதைத் தவிர்த்து, கொவிட் 19 பரவல் தடுப்பு விதிமுறைகளுக்கு அமைவாக முகக்கவசங்கள் அணிந்து,சமூக இடைவெளியைப் பேணியவாறு ஒவ்வொருவரும் தனித்தனியாக விளக்கேற்றியும் அஞ்சலிக்குமாறு கோருகின்றோம்.

அத்துடன் முள்ளிவாய்க்காலில் எமது மக்கள் அனுபவித்த பட்டினிச் சாவை நினைவு கொள்ளும் வகையில் கஞ்சியினை பரிமாறி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நினைவுகூரும் இவ் வரலாற்றுக் கடமைகளை முன்னெடுத்துச் செல்லுமாறு எமது மக்களைத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய நாம் அன்புரிமையுடன் வேண்டி நிற்கின்றோம்.

ஓரிடத்தில் ஒன்று கூடி நினைவேந்துவதே எமது கூட்டுரிமையாகும். எனினும் இம்முறை கொவிட் 19 ஆபத்து நிலையில் ஓரிடத்தில் ஒன்று கூடுவதிலுள்ள ஆபத்தினை கருத்திற் கொண்டு தனித்தனியாக நினைவேந்தலை மேற்கொண்டாலும், இந்நினைவுகூரல் நிகழ்வுகள் மூலமான கூட்டுப் பிரக்ஞையை வெளிப்படுத்தும் முகமாக அவற்றை சமூக வலைத் தளங்களிலும், ஊடகங்களிலும் பகிர்ந்து கொள்ளுமாறும் அன்புரிமையுடன் வேண்டுகின்றோம்.- என தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# நோர்வூட்டில் பிரதேச சபை மூடப்படுகிறது



நோர்வூட் பிரதேச சபைத் தலைவர் ரவி குழந்தைவேல் கொவிட் தொற்றுக்கு உள்ளாகியுள்ளார் என் டிக்கோயா ஆதார வைத்தியசாலையின் விசேட வைத்தியர் உபுல் ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவருக்கு தொற்று உறுதியாகியுள்ளது.

இதன் காரணமாக நோர்வூட் பிரதேச சபைத் தலைவரின் குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த 13 ஆம் திகதி மாதாந்த சபை அமர்வு இடம் பெற்றமையினால் சபையின் உறுப்பினர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் பிரதேசசபை காலவரையறையின்றி முடப்படஉள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# உண்டு களிக்கவோ, உண்டதைக் கழிக்கவோ தன் நாட்டு மக்களை அனுமதிக்காத அரசு இது

## நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் காட்டம்



(அப்துல்சலாம் யாசீம்)

கொரோனா அச்சத்துக்கு மத்தியில் துறைமுக நகரப் பொருளாதார ஆணைக் குழு சட்டமூலத்தை அவசரமாகச் சமர்ப்பிப்பது சீனாவின் அழுத்தத்தினாலா என நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் கேள்வி எழுப்பினார்.

இந்த அரசாங்கத்தில் அரிசி உட்பட உணவுப்பொருள்களுக்கு ஏற்பட்ட விலையேற்றத்தைப் பாருங்கள். கழிவறை கொமோட் ஒன்றின் விலை 19 ஆயிரத்து 500 ரூபாவிலிருந்து ஒரேயடியாக 35 ஆயிரம் ரூபாவுக்கு விலை கூட்டப்பட்டுள்ளது. இந்த நாட்டின் பிரஜைகளை இந்த அரசு ஒழுங்காக உண்டு களிக்கவோ, ஒழுங்காக உண்டதைக் கழிக்கவோ முடியாத நிலைமைக்கு தள்ளியுள்ளது. - என்றும் அவர் கூறினார்.

நேற்றுக் காலை கொழும்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

நாட்டில் பல முதன்மையான பிரச்சினை கள் உள்ள நிலையில் ராஜபக்ஷ அரசு இந்தவாரத்தில் கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட மூலத்தை அவசர அவசரமாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவருவதில் பலத்த சந்தேகங்கள் உள்ளன.

கொரோனா அபாயம் இன்று நாட்டில் தலைவிரித்தாடுகின்றது. அதனை ஒழிக்க இருந்த சந்தர்ப்பத்தை தனது மௌட்டிக செயற்பாட்டால் இந்த அரசு உதாசீனம் செய்தது. இனவாத அரசியலுக்குத் தீனி போட்டு சமூகத்தில் கொவிட் வளர களம் அமைத்துக்கொடுத்தது. கடைசியில் தன்னை நம்பிய 69 லட்சம் பேரை மட்டுமன்றி முழு நாட்டையும் மரண பீதியில் வைத்துள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொழும்பு துறைமுக நகரப் பொருளாதார ஆணைக்குழுசட்டமூலத்தை அவசர அவசரமாக நிறைவேற்றிக்கொள்ள எத்தனிக்கிறது.

20 ஆவது திருத்தத்துக்கு ஆதரவளித்த முஸ்லிம் எம்.பிக்களுக்கு இப்தாரில் இதுபற்றி பேசப்பட்டதாக கதைகள் வருகின்றன. அவர்களது ஆதரவும் இதற்கு கிடைக்கக் கூடும். கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் வசதிகளை பெறவே இவ்வாறு கைதூக்கினோம் என்று நாளை அவர்கள் கூறினாலும் ஆச்சரியமில்லை.

நாட்டின் பாதுகாப்பு , சுதந்திரம் உள்ளிட்ட விடயங்களோடு தொடர்புபட்ட இந்த சட்டமூலம் பலத்த விமர்சனங்களையும் எதிர்ப்புகளையும் பெற்றுள்ள நிலையில் சீனாவின் அழுத்தம் காரணமாகவா அவசர அவசரமாக நிறைவேற்றப்பட போகின்றது என்ற சந்தேகம் பரவலாக உள்ளது.

இதுபோன்ற சட்ட மூலங்களை மக்களது அவல நிலைமைகளை சாதகமாக்கி சட்டமாக்குவதன் மூலம் மக்கள் முதுகில் அடிமைச் சாசனத்தை வரைந்து இந்த அரசு இலங்கையர்களை எதிர்காலத்தில் அந்நியர்களுக்கு அடிமைகளாக்க முனைகிறது.

தமது அரசியல் இருப்பையும் பிழைப்பையும் பாதுகாக்க அரச தரப்பும் அதற்கு ஆதரவளிக்கும் சுய இலாபங்களை குறித்து மட்டுமே சிந்திக்கும் கூட்டமும் எடுக்கும் இந்த முயற்சியினால் முழு நாட்டு மக்களும் பாதிக்கப்பட போகின்றார்கள்.

எனவே இந்த அசாதாரண சூழலில் இத்தகைய சட்டமூலத்தை கொண்டு வருவதை பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதிகள் என்ற வகையில் கடுமையாக எதிர்க்கின்றோம். இந்த அடிமைச் சாசன அரசியலுக்கு பதிலாக மக்களது உயிரச்சம் நீங்கக் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றோம். - என்றார்.

# வவுனியாவில் காரணமின்றி வாகனங்களில் பயணித்தோர் எச்சரிக்கை செய்யப்பட்டனர்





வவுனியா,மே 17

வவுனியாவில் அனுமதி மற்றும் உரிய காரணங்களின்றி வீதியில் சென்ற வாகனங்கள் எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்பட்டன.

நாடு முழுவதும் மூன்று நாள்கள் பயணத்தடை விதிக்கப்பட்டு பொதுமக்கள் வெளியில் நடமாடத் தடை விதிக்கப்பட்டுள்ள துடன் அத்தியாவசிய தேவை கள் மற்றும் மருத்துவ சேவை கள், ஆடைத்தொழிற்சாலை என்பனவற்றிற்கு மாத்திரம் அனு மதி வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா பொலிஸாருடன் இணைந்து பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மோட்டார் சைக்கிள்களில் வவுனியா நகரில் திடீர் சோதனை நடவடிக்கை ஒன்றை நேற்று முன்னெடுத்திருந்தனர்.

இதன் போது அனுமதியின்றி வர்த்தக நிலையங்களைத் திறந்திருந்தவர்கள், அனுமதிப்பத்திரமின்றி பொருள்களை வாகனங்களில் ஏற்றிச் சென்றவர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் நடமாடியவர்கள், ஆடைத் தொழிச்சாலை அனுமதிப்பத் திரத்துடன் வேறு நபர்களை ஏற்றிச்சென்ற வாகனச் சாரதிகள் எனப் பலர் பொலிஸார் மற்றும் சுகாதார பிரிவினரினால் மடக்கிப்பிடிக் கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

மேலும், அனுமதிப்பத்திரமின்றி தென்பகுதி மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து பலர் வவுனியாவிற்கு வருகை தந்துள்ளமையும் இதன் போது கண்டறிப்பட்டது. அவர்களுக்கு எதிராக முறைப்பாடுகளும் பதிவு செய்யப்பட்டன.

# வவுனியாவிலிருந்து மரக்கறிகளை வெளியே கொண்டு செல்ல அனுமதி

வவுனியாவில் இருந்து வெளி மாகாணங்கள் மற்றும் வேறு மாவட்டங்களுக்கு மரக்கறிகளை கொண்டு சென்று சந்தைப்படுத்துவதற்கான அனுமதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் நே.விஷ்ணுதாசன் தெரிவித்துள்ளார்.

கொவிட் 19 பரவல் தீவிரமடைந்துள்ள நிலையில் போக்குவரத்து தொடர்பில் அரசாங்கத்தால் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் வவுனியாவில் மரக்கறிகள், பழங்கள், விவசாய உற்பத்திகளை மேற்கொள்வோர் அவற்றை வெளி மாகாணங்கள் மற்றும் வெளி மாவட்டங்களில் சந்தைப் படுத்துவதற்கு விவசாயிகளின் அவசர நிலை கருதி அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, வெளி மாகாணங்கள் மற்றும் வெளி மாவட்டங்களுக்கு மரக்கறிகள், பழங்கள், விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்த கொண்டு செல்லும் விவசாயிகள் தங்கள் பிரிவு கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு வருகை தந்து அனுமதிப் பெற முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ட்ரோன் கமரா பறக்க விட்டவர் கைதானார்

தெஹிவளை ரொபட் பிரதேசத்தில் சட்டவிரோதமாக ட்ரோன் கமராவொன்றை வானில் பறக்கச் செய்த இளைஞர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் தெஹிவளை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த் ட்ரோன் கமராவையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளமையுடன், சந்தேக நபரை நேற்று நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

# தினம் ஒரு விவசாயத் தகவல்

Agriculture Information

## சின்ன வெங்காயச் செய்கை வகையும் வயது நாள்களும்

| வர்க்கம் | வயது (நாட்கள்) | விசேட இயல்புகள் |
|---|---|---|
| யாழ்ப்பாண உள்ளூர் | 60 - 75 | |
| திண்ணவேலி சிவப்பு | 45 - 60 | |
| வேதாளம் | 80 - 90 | பூக்களிற்காகப் பயன்படுத்தப்படும் வெங்காயம் ஆகும |
| வல்லாரை | 70 - 80 | |
| தெலுல்ல தெரிவு | 60 - 75 | |
| MICLO - 1 | 60 - 65 | உண்மை விதை உற்பத்திக்குப் பொருத்தமானது |

ர.ரஜீவன் - விவசாய பட்டதாரி

இக் கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப் பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில் மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.





அங்கம் 06

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

- செல்லத்துரை ரவீந்திரன் -

**25. தமிழர்கள் தமக்கு நடந்த அட்டூழியங்களின் அடிப்படையில் ஒரு சர்வதேச வாக்கெடுப்பின் மூலமாக சுயநிர்ணய உரிமையை (Self determination) அடையலாம் என்ற அபிப்பிராயம் நிலவுகிறதே?**

நாட்டினைப் பிளவுபடுத்தாமல் (ஏக்ராஜ்ய) ஒரு சுயாட்சி முறையையோ, சமஷ்டிக் கோரிக்கை பற்றியோ, அதிகாரப் பரவல் பற்றியோ சிங்கள மக்களிடமோ அரசுடனோ பேசுவதற்கே முடியாதிருக்கிறது.

அதிகாரம் முழுவதும் மட்டுமல்ல, சிறிலங்கா முழுவதும் தங்களுக்கே சொந்தம் என்ற பேரினவாத போக்கு அவர்களிடம் தெளிவதாக இல்லை. இதைச் சற்று உணர்ந்தவராகத்தான், ஐக்கிய நாடுகளின் சர்வதேச மனித உரிமை குழுவின் நீதியான, சுதந்திரமான, சர்வதேச நீதிபதிகளின் விசாரணை வேண்டும் என்ற தீர்மானங்களை சிறிலங்கா அமுல்படுத்தும் என்று அரசின் சம்மதத்தை தெரிவிக்கும்போது அன்றையபோது வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர *"700 வருடங்களாக நாம் ஒரு தேசத்தை கட்டியெழுப்ப எடுத்த முயற்சிகளெல்லாம் தோல்விகளிலேயே முடிந்தன. இதற்கு மேலும் நாம் என்ன எதிர்பார்க்கலாம்? இந்த 70 வருடங்களில் இனங்கள் இரண்டும் இரு துருவங்களாகி எதிர்காலம் என்பது ஒரு சர்வாதிகாரத்தை நோக்குகிறது. ஆதலால் எங்களது மக்கள் தமது எதிர்காலத்தை தமது கைகளில் எடுத்து தீர்மானிக்கவேண்டும் என்பதால்தான்இவற்றுக்கு எமது அரசு அனுசரணை வழங்குகிறது"* – என்று அறிவித்தார்.

அது ஒரு நல்லாட்சி மலரும் என்ற அடிப்படையிலும் ஒரு நியாயமான தீர்வைநோக்கி நகர முடியும் என்ற புதிய நம்பிக்கையிலும்தான் கூறப்பட்டது.

ஆயினும் சிறிலங்காவின் அதிகார வட்டத்துக்கே நாம் திரும்பி, நாங்கள் தனி நாடோ அல்லது அரசோ கேட்கவில்லை, பிரிவினையை நாடவில்லை, பிரிக்கப்படாத ஒரு நாட்டுக்குள் அதிகாரப் பரவலைக் கேட்கிறோம் என்று அறிவித்தோம். அதற்கும் மேலே போய் வட்டுக்கோட்டை தீர்மானத்தைக் கைவிட்டு விட்டோம் என்றுகூட சொல்லிப் பார்த்தோம்.

உரலில் அகப்பட்ட தமிழர்களைப் பேரினவாதம் மேலும் மேலும் இடித்ததுதான் மிச்சம். நல்லாட்சியும் காலாவதியானது.

ஆகவே ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்கு அவர்கள் ஒத்துவருவார்கள் என்பது வீண் கற்பனை. அப்படியான ஒரு வாக்கெடுப்பை ஒரு பலமான நேச நாடோ அல்லது சர்வதேசமோ உறுதிப்படுத்த வேண்டும். சர்வதேசம் அதனை செய்ய வேண்டுமானால் நாங்கள் ஐ.நாவின் பாதுகாப்பு சபை மூலம் அதனை ஐ.நாவின் அங்கத்தினூடாக செயல்படுத்த வேண்டும். அதற்கு சீனா, ரஷ்யா போன்ற நாடுகள் அனுமதிக்குமா என்பது கேள்விக்குறி.

**26. கோட்டாபய அரசின் போக்கை, எண்ணங்களை சர்வதேசம் புரிந்து கொள்கிறதா?**

ஆம். அதனை இந்த வருடம் சர்வதேச மனித உரிமைகள் மன்றுக்கு தரப்பட்ட ஆணையாளரின் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. இவை ஓர் இனப் படுகொலைக்கு இட்டுச் செல்லலாம் என்ற ஆதங்கங்கள் உண்டு.

ஆனாலோ கோட்டாபயவின் இன்றைய வெளிவிவகார அமைச்சர் தினேஷ்குணவர்தன *"இலங்கையின் இறைமையை மற்றைய நாடுகள் தமது பூகோள அரசியல் நாட்டங்களுக்காகப் பாவிப்பதற்கு விடமுடியாது."* – என்று திடமாகச் சொல்லுகிறார். அதிகாரப் பரவல் என்ற அடிப்படையில் நாட்டின் பிரிவினையைக் கொண்டுவரும் ஒரு நாசூக்கான திட்டத்தை அந்த நாடுகளின் அரசியல் தேவைகளுக்காக விட்டுக்கொடுக்க முடியாது என்றார்.

இன்று சந்தோஷமாகவும் செல்வச் செழிப்பாகவும் இருக்கும் நாடுகள் ஒரு பன்முக ஆட்சியில் ஒற்றுமையை கண்டுள்ளன. ஆனால் சிறிலங்காவோ அதிகாரம், அடக்குமுறை என்று ஓர் இனத்துக்கெதிராக நிற்கிறது. 'முள்ளிவாய்க்காலில் ஏதும் நடக்கவில்லை. புலிகளையே அழித்தோம். அதன் நினைவுகள் கூட தமிழினத்துக்குத் தேவையில்லை' என்று நினைவுத் தூபியையே அழிக்கிறது.

இவற்றைப் பார்த்தால் இனக்கொலையின் அங்கங்களான பட்டியலிடுதல் **(Classification)** என்ற முதல் படியிலிருந்து வெகுவாக முன்னேறி, அழித்தலை **(Extermination)** அடைந்து, கடைசி கட்டமாக மறுத்தலில் **(Denial)** நிற்கிறோம்.

**27. இவற்றை அறியும்பொழுது ஐ.நாவினால் எமது அட்டூழியங்களுக்கு எதிராக எதுவும் நடக்குமென்று தெரியவில்லையே?**

ஐ.நா. ஓர் அரசியல் அமைப்பு. சர்வதேச புவியியல் நடப்பிற்கேற்ப, அதன் பின்னணியிலுள்ள நாடுகளின் அபிலாஷைகளுக்கு ஏற்ப இயங்கும். அதனையே நம்பிக் கொண்டு இருப்பது கடல் வற்றுமெனக் காத்திருந்து பூனை உடல் வற்றி செத்த கதையாகத்தான் முடியும். ஆனால் சர்வதேசத்தின் பார்வைக்காக ஐ.நாவின் ஊடாக எமது இனக்கொலையின் நடப்புகளை அங்கு வைத்திருக்க வேண்டும்.

பூகோள அரசியல் மாற்றங்களால் அவை சில வடிவங்கள் எடுக்கலாம். அது நன்மையைத் தரலாம்.

**28. ஐ.நா. பாதுகாப்பு சபையின் ஒரு தீர்மானம் வந்து விட்டால் அது நடைமுறைப்படுத்தப்படுமா?**

பாதுகாப்பு சபையினால் ஆக்கப்படும் ஒரு தீர்மானத்தை நடைமுறைப்படுத்த அதற்கு அதிகாரம் உண்டு. அதற்காக அங்கத்துவ நாடுகளிலிருந்து ஆயுத, இராணுவ உதவிகளைப் பெறவும் அதற்கு உரிமையும் உண்டு. ஆனால் அதை நடைமுறைப்படுத்தும் சிக்கல்கள் பழையபடி பூகோள அரசியல் நோக்குகளினாலும் அதன் பின்னணியிலுள்ள பலம் பொருந்திய நாடுகளின் நிகழ்ச்சி நிரலுமேயே நடக்கின்றன. கடந்த 15 வருட காலங்களில் ஐ.நாவினால் நிறைவேற்றப்பட்ட நூற்றுக்கும் மேலான தீர்மானங்கள் நிறைவேற்ற வழியின்றி கிடப்பில் தூங்கி கொண்டிருக்கின்றன. பலம் வாய்ந்த நாடுகள் இப்படியான தீர்மானங்களை நிறைவேற்றி, அகப்பட்ட நாட்டுக்குப் பொருளாதார, இராணுவ நெருக்கடியை ஏற்படுத்தி, தமது நிகழ்ச்சி நிரலுக்கு இணைய – இணங்க – வைக்கின்றன.



பலமான மேற்கத்திய சர்வதேச ஒழுங்குக்குள் சிறிலங்கா அரசைக் கொண்டு வருவதற்கான ஒரு நடைமுறையில், தமிழர்களின் நீதிக்கான குரலும் ஐ.நாவில் ஓரிடத்தில் சந்திப்பதன் காரணமாகவே தமிழர்களுக்கெதிரான அட்டூழியங்கள் கருத்தில் கொள்ளப்படுகின்றனவேயன்றி தமிழர்களுக்காக என்று மட்டும் கையாளப்படவில்லை. எமது விடயத்தில் இந்தியா எந்த சுயநலத்தில் இயங்கியதோ அதே சுயநலங்கள் இங்கும் உண்டு. இதை விளங்கிகொள்ள வேண்டும்.

இஸ்ரேலுக்கு எதிராக எத்தனையோ முக்கியமான தீர்மானங்கள் ஐ.நாவினால் நிறைவேற்றப்பட்டன. ஆனாலும் இவற்றில் ஒன்றைத்தன்னும் நடைமுறைப்படுத்த அமெரிக்கா விடவில்லை. இஸ்ரேல் உலகத்துக்கே பதிலடியாக, அமெரிக்காவின் துணை இருந்ததால், பலஸ்தீனியர்கள் குடியிருப்புக்களை அழித்து அங்கு யூதர்களை குடியேற்றியது. அப்படிச் செய்யாது, அவற்றிலிருந்து வெளியேற வேண்டும் என்று ஐ.நா. எத்தனையோ தீர்மானங்களை மேலும் மேலும் நிறைவேற்றியது. ஆனால் நடந்ததோ பூஜ்ஜம். ஆனால் ஐ.நா. தீர்மானத்தை அமுல்படுத்தவில்லை என்பதற்காகவே அமெரிக்கா ஈராக்குக்கு எதிராக யுத்தத்துக்கு சென்று அதனை நிர்மூலமாக்கியது. 128 நாடுகள் ஐ.நாவில், ஜெருசேலத்தை இஸ்ரேலின் தலைநகரமாக அங்கீகரிக்கக்கூடாது என்று தீர்மானம் எடுத்தபோதும் டொனால்ட் ட்ரம்ப் அதனை மீறி ஜெருசேலத்தை தலைநகராக அங்கீகரித்தார்.

ஆகவே அமுல்படுத்தல் – படுத்தாமை என்பதெல்லாம் யார் எனக்கு நண்பன், யார் எதிரி என்பதை பொறுத்துள்ளது. இங்குதான் நாங்கள் சிறிலங்காவின் அசாதாரண நம்பிக்கை போக்குகளையும் அதற்காக சீனாவின் நட்பையும் பிராந்திய பலத்துக்குத் தோள் கொடுப்பதையும் அறிந்து கொள்ளவேண்டும்.

கண்ணதாசசன் எழுதியவாறு சிறிலங்கா சீனாவின் கழுத்திலிருந்தபடி இந்தியாவைப் பார்த்து கருடா சௌக்கியமா என்று கேட்கிறது.

**29. இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கும் அதனை அமுல்படுத்துவதற்கும் பலவாறான சிக்கல்கள் உண்டானால் ஐ.நாவில் எங்களது நேரம், வளங்களை கொட்டி ஏதாவது எதிர்பார்ப்பது பிரயோசனமானதா?**

நன்மை யாதெனில் தமிழர்களுக்கெதிரான அட்டூழியங்கள் சர்வதேசத்தில் பார்வையில் இருப்பது.

இந்த வருடம் நடந்த சர்வதேச மனித உரிமை மன்றில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தால் சாட்சியங்கள் ஆராயப்படுவதற்கும் மனித குலத்திற்கெதிரான செயல்களைப் புரிந்தவர்கள் கண்டறியப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்க உதவுகிறது. இவை சிறிலங்காவிற்குப் பீதியையும் கிலியையும் ஒரு விதத்தில் ஏற்படுத்தி மேலும் மேலும் சகவாசகங்களைத் தேட வைக்கிறது.

ஆனால் ஐ.நா. பாதுகாப்பு சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடப்பாடுகள், ஒரு தீர்மானம் வரக்கூடிய சாத்தியக்கூறுகள் அமுல் நடத்தப்படும் திடசங்கற்பம் என்பன பற்றி சொன்னேன். இவற்றைத் தூக்கி நிறுத்தி எமது வளங்களைப் பிரயோசனப்படுத்த வேண்டும்.

(வளரும்)

# அருந்ததி

+94 777 164 524
www.arunthathee.com

## இணைய திருமண சேவை

## சூரியன் + செவ்வாய் உள்ள மணமகன் விபரம்

**17189|வ|1993**
பருத்தித்துறை|இந்து
Assistant Manager|HND
166 செ.மீ |சூ.செ:11
திருவோணம் (மகரம்)

**16739|வே|1991**
கிளிநொச்சி |இந்து|Qatar
Charted Accountant
178 செ.மீ |சூ.செ:02
அனுஷம் (விருச்சிகம்)

**17183|வே|1991**
நல்லூர்|இந்து|MA
Junior Executive at Bank
176 செ.மீ|சூ.செ:09
ஆய்யிலியம் (கடகம்)

**16817|வே|1991**
கைதடி|இந்து
Proprietor |A/L
155 செ.மீ |சூ.செ:01
அஸ்வினி (மேடம்)

**15658|ந|1991**
யாழ்.நகரம்|இந்து
Proprietor|NVQ
168 செ.மீ |சூ.செ:03
அவிட்டம் (மகரம்)

**11581|வே|1991**
கொக்குவில்|இந்து
Engineer|Canada
165 செ.மீ|சூ.செ : 06
மூலம் (தனுசு)

**17555|வே|1991**
கொழும்பு -06|இந்து
Network Engineer
183 செ.மீ| சூ.செ:06
மூமைம்(தனுசு)|சண்டியிப்பாய்

**17357|வி|1991**
யாழ்.நகரம்|இந்து
Engineer
168 செ.மீ | சூ.செ:06
சதயம் (கும்பம்)

**14394|வே|1991**
நீர்வேலி|இந்து|Australia
170 செ.மீ|சூ.செ:02
Customer Service|Degree
மிருகசீரிடம் (ரிஷபம்)
ரீ

**15736|வே|1991**
நெல்லியடி |இந்து
175 செ.மீ | சூ.செ:06
Technical Officer
திருவோணம் (மகரம்)

**11562|வே|1991**
கொழும்பு-06|இந்து
178 செ.மீ | சூ.செ:11
Engineer
மூலம் (தனுசு)

**17612|வே|1991**
கரவெட்டி|இந்து|US
174 செ.மீ| சூ.செ:05
Assistant Manager|A/L
கேட்டை (விருச்சிகம்)

**13728|வே|1989**
உடுப்பிட்டி|இந்து|Canada
170 செ.மீ |சூ.செ :11
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)

**15541|வே|1989**
கொழும்பு-04|இந்து
180 செ.மீ |சூ.செ :09
Doctor (Internship)
பூரட்டாதி (கும்பம்)|இணுவில்

**12287|வே|1989**
இணுவில்|இந்து
165 செ.மீ|சூ.செ :03
Engineer
கேட்டை (விருச்சிகம்)

**16550|வே|1989**
மல்லாகம்|இந்து
170 செ.மீ |சூ.செ :02
Network Engineer
அனுஷம் (விருச்சிகம்)

**15269|வே|1989**
பருத்தித்துறை|இந்து
188 செ.மீ|சூ.செ :09
Quantity Surveyor|Bsc
விசாகம் (துலாம்)

**16712|வே|1989**
மட்டக்களப்பு|இந்து|Col-6
162 செ.மீ |சூ.செ:03
Software Engineer
திருவாதிரை (மிதுனம்)

**16400|வி|1989**
தெல்லிப்பழை|இந்து
155 செ.மீ |சூ.செ : 04
Software Engineer|A/L
பூரம் (சிம்மம்)

**16571|வே|1989**
இணுவில்|இந்து
169 செ.மீ|சூ.செ : 07
Assistant Manger|A/L
ஆய்யிலியம் (கடகம்)

**15444|வே|1989**
கரவெட்டி|இந்து
175 செ.மீ|சூ.செ : 02
Regional Manager|MBA
உத்திரட்டாதி (மீனம்)
ரீ

**16733|வே|1987**
அம்பாறை|இந்து
168 செ.மீ |சூ.செ : 03
Lecturer|Msc
கார்திகை (ரிஷபம்)

**15766|வி|1987**
நல்லூர்|இந்து
163 செ.மீ |சூ.செ : 06
Engineer
பூராடம் (தனுசு)

**13354|வே|1987**
யாழ்.நகரம்|இந்து
175 செ.மீ|சூ.செ : 03
Accountant|HNDA
மிருகசிரிடம் (மிதுனம்)

## சூரியன் + செவ்வாய் உள்ள மணமகள் விபரம்

**16096|வி|1998**
கரவெட்டி |இந்து
145 செ.மீ |சூ.செ: 06
A/L |கேட்டை (விருச்சிகம்)

**15886|க|1998**
கொழும்பு-06|இந்து
Trainee at Bank | ACCA
162 செ.மீ |சூ.செ: 09
பரணி (மேடம்)

**17309|வே|1996**
தொல்புரம் |இந்து
165 செ.மீ |சூ.செ: 11
உத்தரம் (சிம்மம்)
கொழும்பு
பூரம் (சிம்மம்) | பட்டதாரி

**14748|வே|1996**
மானிப்பாய்|இந்து
164 செ.மீ| சூ.செ: 07
Bank Officer|CIMA
அவிட்டம்(மகரம்) |Col

**16039|வே|1996**
கரவெட்டி|இந்து
170 செ.மீ |சூ.செ: 05
Quantity Surveyor பூராடம்
(தனுசு)

**16808|வே|1995**
சாவகச்சேரி |இந்து
154 செ.மீ|சூ.செ : 12
BA|மூலம் (தனுசு)

**14092|வே|1995**
பண்டத்தரிப்பு|இந்து
153 செ.மீ |சூ.செ:05
Analyst|Bsc|Dehiwala
அனுஷம் (விருச்சிகம்)

**15985|வே|1994**
கரவெட்டி|இந்து| Canada
153செ.மீ |சூ.செ : 04
Accountant|A/L
திருவாதிரை (மிதுனம்)

**12845|வே|1994**
சாவகச்சேரி|இந்து
Data Process Analyst
பரணி (மேடம்)
165 செ.மீ|சூ.செ:08

**12208|வே|1994**
மானிப்பாய|இந்து|Canada
155செ.மீ |சூ.செ : 02
Accountant|(Diploma)
சதயம் (கும்பம்)

**17099|வே|1994**
தர்மபுரம்|இந்து
158 செ.மீ |சூ.செ : 10
Manager (BA)˙ யாழ்ப்பாணம்
அவிட்டம் (மகரம்)

**14257|வே|1994**
கொழும்புதுறை|இந்து
153 செ.மீ |சூ.செ : 10
Assistant (A/L)
பூராடம் (தனுசு)

**13303|வே|1994**
வேலணை|இந்து
155 செ.மீ |A/L
அவிட்டம் (மகரம்)
சூ.செ : 01

**15673|வே|1994**
கண்டி|இந்து |சூ.செ : 07
158 செ.மீ |A/L
Public Relation Officer
விசாகம் (துலாம்) | புத்தூர்

**17441|ப|1994**
ஏளாலை|இந்து
175 செ.மீ |சூ.செ: 04
Accountant (Msc)
பூரம் (சிம்மம்)

**15128|வே|1993**
யாழ்நகரம்|இந்து
167 செ.மீ |கொழும்பு 06
Manager (ACCA) |சூ.செ:12
உத்தராடம் (மகரம்)

**16126|வே|1993**
யாழ்நகரம்|இந்து
162 செ.மீ |சூ.செ : 06
Accountant (Bsc)
ரேவதி (மீனம்) கொழும்பு 06

**16883|வே|1993**
தெல்லிபபழை|இந்து |Col 06
165 செ.மீ|சூ.செ : 07
Finance Executive (Bsc)
உத்திரட்டாதி (மீனம்)
ெ

**16898|வே|1993**
கோண்டாவில்|இந்து
161 செ.மீ |சூ.செ : 01
Searching (Degree)
சுவாதி (துலாம்)


**13512|வே|1993**
பருத்தித்துறை|இந்து
160 செ.மீ ||சூ.செ : 01
Nurse (Bsc Following)
சுவாதி (துலாம்)

**11767|வே|1992**
காரைநகர்|இந்து
155 செ.மீ|சூ.செ : 09
Accountant (B.com)
பரணி (மேடம்) கொழும்பு 06

**19079|வே|1992**
திருநெல்வேலி|இந்து
150செ.மீ |சூ.செ : 09
ரேவதி (மீனம்)
Beautician (Diploma)

**13578|கோ|1992**
உடுவில்|இந்து
158 செ.மீ |சூ.செ : 02
Project Manager (B.Tech)
உத்திரட்டாதி (மீனம்)

**13819|வே|1991**
பண்டத்தரிப்பு|இந்து
151 செ.மீ||சூ.செ : 03
Development Officer
(BA) மூலம் (தனுசு)




தற்பொழுது விற்பனையில்
அரச தனியார் தொழில் புரியும் உள்நாட்டு,
வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன்
அருந்ததி திருமண இதழ் 23
இணையத்தில் வாசிக்க
www.rebrand.ly/i23

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு
இலக்கத்தை (Profile No) Whatsapp
94777164524 இற்கு அனுப்பி
குறித்த வரனின் முழுமையான விபரத்தை
பெற்றுக்கொள்ள முடியும்.

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

# தமிழர் - முஸ்லிம்கள் உறவை வலியுறுத்தி விட்டு மறுபுறம் மூட்டி விடுகின்றனர் கூட்டமைப்பினர்!

## குறை கூறுகின்றார் உலமாக் கட்சி தலைவர் முபாரக் அப்துல் மஜீத்

(பாறுக் ஷிஹான்)

அடிக்கடி தமிழர் - முஸ்லிம் உறவை வலியுறுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பின்னர் மக்களை மூட்டிவிட்டு சண்டைக்கு இழுத்து விடுகிறார்கள். அதைத்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசனும் செய்துகொண்டிருக்கிறார் என உலமா கட்சி தலைவர் முபாரக் அப்துல் மஜீத் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டம் கல்முனையில் அமைந்துள்ள உலமா கட்சி காரியாலயத்தில் நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் -

அடிக்கடி தமிழ் - முஸ்லிம் உறவை வலியுறுத்தும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பின்னர் மக்களை மூட்டிவிட்டு சண்டைக்கு இழுத்து விடுகிறார்கள். அதைத்தான் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசனும் செய்துகொண்டிருக்கிறார். அவர் கூறுவது போன்று அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் நிலத்தை முஸ்லிம்கள் எங்கு கையகப்படுத்தியுள்ளார்கள் என்று அவரிடம் கேட்கிறேன். கொலனி 12, 05 போன்றவற்றில் முஸ்லிம்களும் 7ஆம் கொலனி, வீரமுனை போன்ற பிரதேசங்களில் தமிழர்களும் வாழ்கிறார்கள். இங்கு யாரும் யாருடைய நிலத்தையும் சுரண்டவில்லை. அடாத்தாக யாரையும் குடியெழுப்பவும் இல்லை. தமிழ் மக்களின் வாக்குகளை இலக்குவைத்து முன்வைக்கப்படும் பிரச்சாரங்களே இவையாகும்.

அப்படி யாராவது செய்திருந்தால், அவர்களுடன் நல்ல உறவைப் பேணிக் கொண்டு சம்பந்தன் ஐயாவின் வீட்டில் புரியாணி சாப்பிடும் அளவுக்கு நெருக்கமாக உள்ள ரவூப் ஹக்கீம் அவர்களிடம் பேசி தீர்க்கலாம். முஸ்லிம்களின் வாக்குகளை பெற்றுக்கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரஸிடம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எதையும் பேசி சாதிக்கும் நிலையே இருக்கிறது. கிழக்கில் தமிழர்களும், முஸ்லிம்களும் சகோதரர்களாக வாழ்கிறார்கள். அவர்களுக்கிடையே சகோதரத்துவத்துடன் எழும் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டியது ஹக்கீமினதும், சம்பந்தனினதும் பொறுப்பாகும்.

காரைதீவு முச்சந்தியில் இருந்த பாபா தைக்காவில் நானறிந்த வகையில் பல தசாப்தங்களாக முஸ்லிம்கள் தங்கி, இளைப்பாறி, தொழுது சென்றிருக்கிறார்கள். கடந்த 1985 ஆம் ஆண்டு அந்த தைக்கா சிதைக்கப்பட்ட பின்னர் அதிகாரத்தைப் பயன்படுத்தி அந்த தைக்கவை இல்லாமலாக்கி விட்டார்கள். இது தொடர்பில்




அதன் நிர்வாகம் இருந்த சாய்ந்தமருது ஜும்மா பள்ளிவாசலிடம் கேட்டால் வழக்கு நிலுவையில் உள்ளதாகக் கூறுகிறார்கள். இது தொடர்பில் பல வருடங்களாக நாங்கள் பேசி வருகிறோம். தொல்பொருளியல் ரீதியாகவும், சமூகவியல் ரீதியாகவும் இதற்கான தடயங்கள் நிறைய உள்ளன. இந்த விடயத்தில் தமிழ், முஸ்லிம் எம்.பிக்கள் தலையிட்டு தீர்வை பெற்றுத்தர வேண்டும். - என்றார்.

# சட்ட திட்டங்களைப் பேணியே கிண்ணியாவில் ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்படுகின்றன

## சம்பந்தப்பட்ட தரப்புகள் தெரிவிப்பு

கிண்ணியாவில் முறையான சட்டதிட்டங்களை பேணியே ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்யப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதேசத்தில் கொரோனாத் தொற்றினால் மரணம் அடைபவர்கள் முறையற்ற விதத்தில் அடக்கம் செய்யப்படுகிறார்கள் என்னும் தலைப்பில் நேற்று முன்தினம் சிங்கள இணையத்தள ஊடகம் ஒன்றில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. பின்னர் இந்தச் செய்தி ஏனைய ஊடகங்களிலும் பரப்பப்பட்டு வந்தது.

இந்த நிலையில் இந்த விடயம் தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி, மரண விசாரணை அதிகாரி மற்றும் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்புகொண்டு விசாரித்த பொழுது இந்த செய்தியானது முற்றிலும் தவறான ஒரு செய்தி என மறுப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிண்ணியா பிரதேசத்தில் ஏற்படும் அனைத்து மரணங்களும் கிராமசேவையாளர், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஊடாக உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டு அவர்களின் வழிகாட்டுதலின் பேரிலேயே ஜனாஸாக்கள் கையாளப்படுகின்றன.

ஜனாஸாக்கள் தொடர்பில் அரசாங்கம் வெளியிட்டுள்ள அத்தனை வழிகாட்டிகளும் முறையாக பின்பற்றப்படுகின்றமையால் ஜனாஸாக்கள் மீதான மரண விசாரணைகள் நடைபெற்று முடிந்த உடன் அதன் மூலப் பிரதிகள் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தப்படுகின்றன என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

தேவையான சந்தர்ப்பங்களில் எல்லாம் திருகோணமலை சட்ட வைத்திய அதிகாரியின் அறிவுறுத்தல்கள் பெறப்படுகின்றன.

மற்றும் படைத் தரப்பினர் பொலிஸாரின் கண்காணிப்பின் கீழேயே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தகைய சூழ்நிலையில் முறையற்ற விதத்தில் ஜனாஸாக்கள் நல்லடக்கம் செய்வதற்கான எந்த ஒரு சந்தர்ப்பமும் இல்லை.

இந்த செய்தியானது பொது மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி அத்தோடு கிண்ணியா பிரதேசம் தொடர்பான ஒரு தப்பான அபிப்பிராயத்தை மற்றவர்கள் மத்தியில் உண்டாக்கும். இந்தத் தகவலை தெரிவித்தார் எனக் கூறப்படும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் இத்தகைய தகவலைதான் தெரிவிக்கவில்லை என்று மறுத்து உள்ளார் என நம்பகமாகத் தெரிய வருகின்றது.

# புதிய செம்மணி வீதியில் அட்டகாசம் புரிந்த கும்பல்

## வீட்டுக்குள் புகுந்து அராஜகம் தங்கச் சங்கிலியும் கொள்ளை



யாழ்ப்பாணம் புதிய செம்மணி வீதியில் உள்ள வீடொன்றினுள் அத்துமீறி நுழைந்த கும்பல் ஒன்று வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள், மோட்டார் சைக்கிள், சைக்கிள், உள்ளிட்ட பொருள்கள் என்பவற்றையும் அடித்து உடைத்து நொருக்கி அட்டகாசம் புரிந்து விட்டு தப்பிச் சென்றுள்ளது..

நாடளாவிய ரீதியில் பயணத்தடை அமுலில் இருந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இத் தாக்குதல் சம்பவத்தில் வீட்டில் இருந்த மூன்று பேர் காயமடைந்துள்ளனர் எனவும், வீட்டிலிருந்த இளைஞன் ஒருவரின் தங்கச் சங்கிலி ஒன்றை தாக்குதலாளிகள் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுமார் 20 இற்கும் மேற்பட்டவர்கள் உள்ளடங்கிய குழு மோட்டார் சைக்கிள்களில் வந்து அட்டகாசம் புரிந்துள்ளனர். இதேவேளை, அந்தக் கும்பல் மது போதையில் அப்பிரதேசத்தில் நீண்ட நேரமாக நின்று அட்டகாசம் புரிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கொரோனா வைத்தியசாலைகளுக்கு உதவ செல்வந்தர்களிடம் கோரிக்கை

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி விடுக்கின்றார்

கொவிட் நோயாளிகளுக்கான வைத்தியசாலைகளில் தேவையான வசதிகளைச் செய்வதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இலங்கையிலுள்ள செல்வந்தர்களிடம் இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே கோரிக்கை விடுத்துள்ளார்.

வைத்தியசாலைகளில் சிகிச்சைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலைகளில் ஒட்சிசனுக்கான தேவை அதிகரித்துள்ளதாகவும், தீவிர சிகிச்சைப் பிரிவு எண்ணிக்கைகளை அதிகரிக்க நேரிட்டுள்ளதாகவும், அதற்கான உபகரணங்கள் அதிகளவில் தேவைப்படுவாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்களது பிரதேசங்களில் காணப்படும் வைத்தியசாலைகளுடன் இணைந்து தேவையான உதவிகளை வழங்குமாறு செல்வந்தர்களிடம் அமைச்சர் கோரியுள்ளார்.



# இ.தொ.காவின் ஆயிரம் ரூபா நாள் சம்பள அறிவிப்பு முழுத்தோல்வி என்கிறது தொழிலாளர் தேசிய சங்கம்

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு அடிப்படை நாள் சம்பளமாக ஆயிரம் ரூபாவை பெற்றுக் கொடுக்கும் விடயத்திலும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோல்வி கண்டுள்ளது என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் உள்ளாட்சிமன்ற உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

தொழில் சுமை எதுவும் அதிகரிக்கப்படாமல், முன்னர் செய்த வேலையின் அளவுக்கே இந்த சம்பள உயர்வு பொருந்தும் என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்திருந்தாலும், தோட்ட நிர்வாகத்தால் தொழில் சுமை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாளொன்றுக்கான பெயருக்கு 20 கிலோ பறிக்க வேண்டும் என நிர்வாகங்கள் வற்புறுத்தும் அதேவேளை, தொழிலாளர்களின் நலன்புரி விடயங்களுக்கும் வேட்டு வைக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அரச மற்றும் தனியார் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா கிடைக்கும் என்ற அறிவிப்புகள் வெளியானபோதும் மஸ்கெலியாவிலுள்ள சில தோட்டங்களில் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபாவுக்கும் குறைவாகவே சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. சில தோட்டங்களில் சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் ஆள்குறைப்பு செய்யப்பட்டுள்ளது.

கூட்டு ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாததால் சந்தா அறவிட்டு வழங்கும் நடைமுறையும் இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனவே, சம்பள அதிகரிப்பு பொறிமுறையை இ.தொ.கா. வெற்றிகரமாக அமுல்படுத்தவில்லை. சம்பள விவகாரத்திலும் அக்கட்சி அரசியல் மற்றும் தொழிற்சங்க ரீதியில் தோல்வி கண்டுள்ளது. - எனவும் திகா அணி உறுப்பினர்கள் விமர்சனங்களை முன்வைத்துள்ளனர்.




# வீடுகளில் பகிரங்கமாக தீபங்கள் ஏற்றி நமது உறவுகளை நினைவு கூருவோம்!

## சி.வீ.கே.சிவஞானம் அழைப்பு



யாழ்ப்பாணம்,மே 17

இந்த வருடமும் நாளை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு எமது இல்லங்கள் ஒவ்வொன்றிலும் பகிரங்கமாக தீபங்கள் ஏற்றி, அநியாயமாக கொல்லப்பட்ட எமது உறவுகள் அனைவரையும் நினைவு கூர்ந்து, வணங்கி, எமது தணியாத விடுதலை உணர்வை வெளிப்படுத்தி நிற்போம்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவரும் வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானம் இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

ஒவ்வொரு ஆண்டும் மே 18 என்பது சிங்கள இனவெறி அரசாங்கத்தின் தமிழின இன அழிப்பின் உச்சம் தொட்ட முள்ளிவாய்க்கால் படுகொலை நினைவு நாளாகும். மனிதர்கள் கொல்லப்பட்டாலும் வரலாறு கொல்லப்பட முடியாதது என்பதை நினைவு கொள்ளும் நாளாகும்.

2010 ஆம் ஆண்டு முதல் இனவெறி அரசாங்கங்களின் தடைகள், இடையூறுகள் எல்லாவற்றையும் மீறியும் தாண்டியும் நாம் எல்லோரும் பல்வேறு வழிகளில் இந்நாளை நினைவு கூர்ந்தே வந்திருக்கிறோம். இதன் ஒரு அடையாளமாகவே முள்ளிவாய்க்கால் மண்ணில் எளிமையான நினைவுத்தூபி நிறுவப்பட்டது

நினைவேந்தல் நிகழ்வுகளை தடுத்து வந்த அரசாங்கம் இப்பொழுது அந்த நினைவுத் தூபியையும் இரவோடு இரவாக இடித்தழித்து விட்டு அப்படி ஒரு தேவை இராணுவத்துக்கு இல்லை என்கிறது.

முள்ளிவாய்க்கால் பிரதேசத்தை முழுமையாக ஆக்கிரமித்து நின்று கொண்டு நினைவுத் தூபி அழித்தது பற்றி தமக்கு தெரியாது என்கின்றனர்.

கல்லாலும் மண்ணாலும் சீமெந்தாலும் அமைந்த நினைவுத்தூபியை அழிக்கலாம். ஆனால் கல்லுப்போல ஒவ்வொரு தமிழன் மனதிலும் ஆழ பதிந்த நினைவை, வரலாற்றை எமது இனம் இருக்கும் வரை அழிக்க முடியாது . இதனை இனவாத சிங்கள தேசம் புரிந்த கொள்ள வேண்டும்.

நிகழ்கால அரசாங்கம் பதவிக்கு வந்த சென்ற ஆண்டு முதல் கட்டவிழ்த்து விடப்பட்ட கடும்போக்குத் தனம் எம் இனத்தை தளர்வடைய செய்ய மாட்டாது என்பதை சென்ற ஆண்டிலும் நிரூபித்தோம். அதே போன்று இந்த வருடமும் நாளை 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு எமது இல்லங்கள் ஒவ்வொன்றிலும் பகிரங்கமாக தீபங்கள் ஏற்றி, அநியாயமாக கொல் லப்பட்ட எமது உறவுகள் அனைவரையும் நினைவு கூர்ந்து வணங்கி எமது தணியாத விடுதலை உணர்வை வெளிப்படுத்தி நிற்போம். – என்று உள்ளது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.05.2021 இல் வெளியிடப்பெற்றது.